Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37 கதிர் : 236 | புதன்கிழமை 20 ஜூலை 2022 | ஆடி 04 ஆம் நாள் வள்ளுவர் ஆண்டு 2053 | பக்கங்கள்: 12 விலை : ரூ. 50

## பாடசாலைகளின் விடுமுறை நீடிப்பு

திங்கட்கிழமையே ஆரம்பம்

கொழும்பு, ஜூலை 20

நாடளாவிய ரீதியிலுள்ள அனைத்துப் பாடசாலைகளினதும் விடுமுறைக்காலம் நீடிக்கப்பட்டுள்ளது. இதன்படி எதிர்வரும் 11 ➤

## சுயேச்சை அணி டலஸின் பக்கம்

கொழும்பு, ஜூலை 20

ஜனாதிபதித் தெரிவின்போது டலஸ் அழகப்பெருமவுக்கு ஆதரவு வழங்கப்படும் என்று சுயேச்சை நாடாளுமன்ற உறுப்பினர்கள் 11 ➤

## சுதந்திரக் கட்சியும் டலஸுக்கு ஆதரவு

கொழும்பு, ஜூலை 20

ஜனாதிபதித் தெரிவின்போது, சுதந்திரக் கட்சி டலஸ் அழகப்பெருமவை ஆதரிக்கும் என்று அந்தக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன 11 ➤

## டலஸ் ஜனாதிபதியானால் சபாநாயகராக மைத்திரி?

கொழும்பு, ஜூலை 20

இன்று நடைபெறும் ஜனாதிபதித் தெரிவில் டலஸ் அழகப்பெரும வெற்றிபெற்றால், சபாநாயகர் பதவி சுதந்திரக் கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கு வழங்கப்படலாம் என்று 11 ➤

# டலஸ் – ரணில் – அநுர ஜனாதிபதி யார்?

நாடாளுமன்றில் இன்று வாக்கெடுப்பு



கொழும்பு, ஜூலை 20

முன்னாள் ஜனாதிபதி கோத்தாபயவின் பதவி விலகலை அடுத்து, நிறைவேற்று அதிகாரம் கொண்ட 8 ஆவது ஜனாதிபதி யார்? என்பதைத் தெரிவுசெய்வதற்கான தேர்தல் நாடாளுமன்றில் இன்று இடம்பெறவுள்ளது. ரணில் விக்கிரமசிங்க, டலஸ் அழகப்பெரும, அநுரகுமார திஸாநாயக்க ஆகிய மூவரும் ஜனாதிபதிப் பதவிக்காகப் போட்டியிடுகின்றனர். 11 ➤

## தமிழ் மக்கள் கூட்டணி டலஸையே ஆதரிக்கும்

அதன் தலைவர் மனோ தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 20

ஜனாதிபதித் தெரிவின்போது டலஸை ஆதரிப்பது என்று தமிழ் மக்கள் கூட்டணி முடி 11 ➤

## ஜனாதிபதித் தெரிவு விடயம் சர்வதேசம் கழுகுப்பார்வை!

கொழும்பு, ஜூலை 20

நாடாளுமன்றத்தில் இன்று 8 ஆவது ஜனாதிபதித் தெரிவு இடம்பெறவுள்ள நிலையில், 11 ➤

## ஜனாதிபதித் தெரிவில் வெளிப்படை இருக்கும்

தூதுவர்களிடம் சபாநாயகர் உறுதி

கொழும்பு, ஜூலை 20

ஜனாதிபதித் தெரிவில் வெளிப்படைத்தன்மை இருக்கும் என்று இலங்கைக்கான தூதுவர்கள் 11 ➤

## ஹக்கீம், ரிஷாத் டலஸ் பக்கம்!

விரிவு - பக். 11

## கூட்டமைப்பும் டலஸை ஆதரிக்கும்

தமிழர் பிரச்சினையைத் தீர்க்க எழுத்து மூலமான வாக்குறுதி தருவதாக டலஸ் உறுதி

கொழும்பு, ஜூலை 20

தமிழர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குரிய எழுத்து மூலமான உறுதிப்பாட்டு ஆவணம் கையளிக்கப்பட்டால், கூட்டமைப்பு டலஸை ஆதரிப்பது என்று தீர்மானித்தது. அவ்வாறு எழுத்துமூல ஆவணம் வழங்க டலஸும் சஜித்தும் சம்மதம் தெரிவித்தனர். 11 ➤

## சஜித்தே டலஸின் பிரதமர்!

இன்று நடைபெறும் ஜனாதிபதித் தெரிவில், டலஸ் வெற்றிபெற்றால் பிரதமராக சஜித் நியமிக்கப்படுவார். இந்தப் புரிந்துணர்வின் அடிப்படையிலேயே சஜித், டலஸுக்கு ஆதரவு வழங்கியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

விரிவு - பக். 02

## பெரமுனவில் மற்றொரு குழுவுடன் டலஸ் தரப்பு பேச்சு

பரபரப்பில் கொழும்பு

கொழும்பு, ஜூலை 20

ஜனாதிபதித் தெரிவு இன்று இடம்பெறவுள்ள நிலையில், பொதுஜன பெரமுனவில் உள்ள மற்றொரு குழுவினரிடம் ஆதரவுகோரி டலஸ் தரப்பு 11 ➤




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் வேகமெடுக்கும் கொரோனாத் தொற்று!

**கொழும்பு, ஜூலை 20**
**நாட்டில் மீண்டும் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கையில் சடுதியான அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது என்றும், நாடு தற்போதுள்ள நிலைமையில் கொரோனாத் தொற்றுத் தீவிரமடைந்தால் பாரதூரமான நிலைமை ஏற்படும் என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது.**

கடந்த பல மாதங்களாக நாட்டில் கொரோனாத் தொற்று பரவல் தணிந்திருந்த நிலையில், தற்போது மீண்டும் வேகமெடுக்க ஆரம்பித்திருக்கின்றது. நேற்றுமுன்தினம் கொரோனாத் தொற்றுக்குள்ளான 62 பேர் இனங்காணப்பட்டுள்ளனர்.
தற்போது உலகளாவிய ரீதியில் கொரோனா அலை தீவிரம் பெற்றுள்ள நிலையில், நாட்டில் கொரோனாத் தொற்றாளர்கள் அதிகம் இனங்காணப்படுவது ஆபத்தானது என்று சுகாதாரத் துறையினர் தெரிவித்துள்ளனர்.
கொரோனா பாதுகாப்புக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுள்ள நிலையில், நாடு ஆபத்தான நிலைமையில் உள்ளது என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது. அதேவேளை, நாடு தற்போது பெரும் பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள நிலையில், மருந்து வகைளுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.
கொரோனாப் பரிசோதனைத் தொகுதிகளுக்கும் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில், கொரோனாத் தொற்று வேகமெடுத்தால் பாரதூரமான விளைவுகளை நாடு சந்திக்கும் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது. (எ-இ)

## டலஸ் ஜனாதிபதியானால் சஜித்துக்கு பிரதமர் பதவி!

கொழும்பு, ஜூலை 20
நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டால், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ பிரதமராகத் தெரிவு செய்யப்படுவார் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:
இருவருக்கும் இடையே ஏற்பட்ட இணக்கப்பாட்டின் அடிப்படையில் இது நடைபெறும். ஜனாதிபதி பதவிக்குப் போட்டியிடும் டலஸ் அழகப்பெருமவுக்கு போதியளவு ஆதரவு உள்ளது- என்றார். (எ-இ)

## ரயில் பயணச்சீட்டுக்கள் முடிவடைவதால் சிக்கல்

கொழும்பு, ஜூலை 20
ரயில் நிலையங்களில் பயணச் சீட்டுக்களின் கையிருப்புக் குறைந்து வருவதால் இலத்திரனியல் பயணச் சீட்டுக்களை வழங்கும் நடவடிக்கையைத் துரிதப்படுத்தவேண்டும் என்று ரயில்வே நிலைய அதிபர்கள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.
இதுதொடர்பில் அந்தச் சங்கம் தெரிவித்துள்ளதாவது:-
இந்த விடயத்தில் இலங்கை ரயில்வே திணைக்களம் எந்தவித அக்கறையும் காட்டவில்லை. அரச அச்சகத்தில் பயணச்சீட்டு அச்சிடும் நடைமுறை இடைநிறுத்தப்பட்டுள்ளது. அச்சிடும் உபகரணங்கள் இலங்கை ரயில்வே தலைமையகத்திலுள்ள அச்சிடும் அலுவலகத்துக்கு மாற்றப்பட்டுள்ளது. பயிற்சி பெற்ற பணியாளர்கள் இன்மையால் செயற்பாடுகள் மந்தமடைந்துள்ளன. இதுதொடர்பாக உடனடிக் கவனம் செலுத்தப்படாவிட்டால் ரயில்வே நிலையங்கள் மற்றும் பல உப நிலையங்களில் நெருக்கடிகள் ஏற்படலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)



## உடைமையில் கோடா ஒருவர் கைது

யாழ்ப்பாணம், ஜூலை 20
இளவாலை, பெரியவிளானில் கோடாவை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று இளவாலைப் பொலிஸார் தெரிவித்தனர்.
பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையிலேயே சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.
சந்தேகநபரிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்றும், விசாரணைகளின் பின்னர் அவர் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (எ-125)

## சஜித்தை பிரதமராக்க பெரமுனவும் சம்மதம்

கொழும்பு, ஜூலை 20
சஜித் பிரேமதாஸவைப் பிரதமராக ஏற்றுக்கொள்வதற்கு சிறிலங்கா பொதுஜன பெரமுன தயார் என்று அந்தக் கட்சியின் தலைவர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.
இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:
இரு கட்சிகளையும் இணைத்து முக்கியமான பிரச்சினைகளுக்குத் தீர்வைக் காண வேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பு. சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் அநேகமான நாடாளுமன்ற உறுப்பினர்கள் டலஸ் அழகப்பெருமவுக்கு ஆதரவளிக்கத் தயாராகவுள்ளனர் - என்றார். (எ-இ)

## சுற்றுலாவிகள் அதிகரிப்பு

கொழும்பு, ஜூலை 20
இந்த மாதத்தின் கடந்த 18 நாள்களில் 25 ஆயிரத்து 547 வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வந்துள்ளனர்.
இது கடந்த ஜூன் மற்றும் மே மாதத்தை விட சற்று அதிகமாகும் என சுற்றுலாத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.
இதேவேளை, இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 4 இலட்சத்து 36 ஆயிரத்து 921 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வந்துள்ளனர். (எ-இ)

## பொதுநலனுக்கு பதிலளிப்பது எம்.பிக்களுக்கு உரிய கடமை

*ப்ரைடே போரம் சுட்டிக்காட்டு*

கொழும்பு, ஜூலை 20
தற்போதைய யதார்த்தத்தைப் புரிந்துகொண்டும் ஏற்றுக்கொண்டும் பொது நலனுக்குப் பதிலளிக்க வேண்டியது 225 நாடாளுமன்ற உறுப்பினர்களின் கடமை என்று ப்ரைடே போரம் அமைப்பு தெரிவித்துள்ளது.
இதுதொடர்பில் அந்த அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்ற முறையில் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் தங்கள் கடமைகளை நிறைவேற்ற வேண்டும் என மக்கள் எதிர்பார்க்கின்றார்கள். அவர்கள் நாடாளுமன்றத்தில் உள்ள மக்கள் பிரதிநிதிகள். அவர்கள் தங்கள் வாக்குமூலமே ஆட்சி மாற்றத்தின் கோரிக்கைக்கு செவிசாய்க்க முடியும். அத்துடன் சர்வகட்சி குறுகிய கால இடைக்கால அரசாங்கத்தை அமைக்க முடியும்.
முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச அரசாங்கத்துடன் தொடர்பில்லாத ஒரு புதிய ஜனாதிபதி நாடாளுமன்றத்தில் தெரிவு செய்யப்படவேண்டும். மக்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்துவதற்கு இத்தகைய ஜனாதிபதியைத் தெரிவு செய்வது மிக அவசியமாகும். பொதுத் தேர்தல்கள் நடத்தப்படுவதற்கு முன்னர், மக்களால் நம்பப்படும் ஒரு புதிய ஜனாதிபதியும், சர்வகட்சி அரசாங்கமும் குறுகிய இடைக்காலத்துக்கு பதவியில் அமர்த்தப்பட வேண்டும். நாடாளுமன்றத்தில் புதிய ஜனாதிபதிக்கான தேர்தல், பல்வேறு சர்வகட்சி இடைக்கால அரசாங்கத்தின் கைகளில் ஆட்சியை வழங்குவது மற்றும் பொருளாதார மீட்சியின் அடித்தளமான அரசியல் ஸ்திரத்தன்மையை கொண்டுவருவதற்கான கடைசி வாய்ப்பாகும். 225 நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் கட்சித் தலைவர்கள் [illegible] மின்றி வாக்களிப்பதன் மூலம் [illegible] யடையவே செய்ய முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)




## பதிவுகள் முடிந்த பின்பே எரிபொருள் விநியோகம்!

*எரிசக்தி அமைச்சு திட்டவட்டம்*

கொழும்பு, ஜூலை 20
நாட்டுக்கு எரிபொருள் கப்பல்கள் வந்தாலும், தேசிய எரிபொருள் அனுமதிப் பத்திரங்களுக்கான பதிவுகள் முடிவடையும் வரையில் எரிபொருள் விநியோகிக்கப்படாது என்று எரிசக்தி அமைச்சுத் தகவல்கள் தெரிவித்தன.
நேற்று 40 ஆயிரம் மெற்றிக்தொன் எரிபொருளுடன் கப்பல் ஒன்று நாட்டை வந்தடைந்தபோதும், பதிவுகள் மேற்கொண்டு முடியும்வரையில் விநியோகத்தை ஆரம்பிப்பதில்லை என்று அமைச்சு உறுதியாக உள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது. இதுவரை 10 லட்சத்துக்கும் அதிகமானோர் பதிவுகளை மேற்கொண்டுள்ளனர்.
தேசிய எரிபொருள் அட்டையை பெற்றுக்கொள்ள பதிவு செய்தவர்கள், எரிபொருள் ஒதுக்கீட்டை அறிந்து கொள்ள விசேட நடைமுறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
FUEL BAL இடைவெளி வாகன இலக்கம் (உதாரணமாக: ABC 1234) என ரைப் செய்து 076 6220 000 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு குறுஞ்செய்தி அனுப்புவதன் மூலம் எரிபொருள் இருப்புத் தொகையை அறிந்துகொள்ள முடியும். அத்துடன் பொதுமக்கள் www.fuelpass.gov.lk என்ற இணையத்தளத்துக்குச் சென்று தேசிய எரிபொருள் அட்டையைப் பெறுவதற்கு பதிவுசெய்ய முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேற்றும் ஏழு பேர் தமிழகத்தில் தஞ்சம்

யாழ்ப்பாணம், ஜூலை 20

இலங்கையில் இருந்து நேற்றும் 7 பேர் தமிழகத்துக்கு தஞ்சம் கோரிச் சென்றுள்ளனர். நாட்டில் பொருளாதார நெருக்கடி தீவிரமடைந்துள்ள நிலையில், தமிழகத்துக்கு தஞ்சம் கோரிச் செல்லும் இலங்கையர்களின் எண்ணிக்கை அண்மைக்காலமாக அதிகரித்துள்ளது.

கடந்த மார்ச் மாதம் முதல் இது வரை பலர் தஞ்சம் கோரி, படகு மூலம் தமிழகம் சென்றிருந்த நிலையில், நேற்றும் 7 பேர் தமிழகத்துக்கு படகு மூலம் சென்றுள்ளனர்.

திருகோணமலை மற்றும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இரு ஆண்கள், இரு பெண்கள், 3 சிறுவர்களே படகு மூலம் தமிழகத்துக்குச் சென்றுள்ளனர்.

தமிழகத்தின் தனுஷ்கோடியைச் சென்றடைந்த இவர்கள், விசாரணைகளின் பின்னர் மண்டபம் முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்று தமிழகப் பொலிஸார் தெரிவித்தனர். (எ-இ)

## டீசல் விலை குறைந்தால் பாண் விலை குறையும்

### உற்பத்தியாளர் சங்கம் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 20

டீசல், எரிவாயு மற்றும் கோதுமை மாவின் விலைகளைக் குறைத்தால் ஒரு இறாத்தல் பாணின் விலையை 50 ரூபாவால் குறைக்க முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் இலங்கை வெதுப்பக உரிமையாளர் சங்கத்தின் தலைவர் என்.கே.ஜெயவர்த்தன தெரிவித்துள்ளதாவது:-

120 ரூபாவில் விற்கப்பட்ட டீசலில் விலையை அரசாங்கம் 460 ரூபாவாக அதிகரித்துள்ளது. தற்போது அதன் விலையை 20 ரூபாவால் குறைத்துள்ளது. இது நகைச்சுவையான விடயம். டீசல், எரிவாயு மற்றும் கோதுமை மாவின் விலைகளைக் குறைத்தால் பாணின் விலையைக் குறைக்க முடியும் - என்றார். (எ-இ)

## கோத்தாபய தப்பியோட அமைதியின்மை காரணம்

### சமந்தா பவர் தெரிவிப்பு



கொழும்பு, ஜூலை 20

அமைதியின்மை காரணமாகவே முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச இலங்கையை விட்டு வெளியேற நிர்ப்பந்திக்கப்பட்டார் என்று சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்காவின் முகவரக நிர்வாகி சமந்தா பவர் குறிப்பிட்டுள்ளார்.

உலகளாவிய உணவுப் பாதுகாப்பு மற்றும் போஷாக்கு நிலை தொடர்பாகக் கருத்துரைத்துள்ள அவர், இலங்கை அரசாங்கம் வீழ்ச்சியடைந்த கடைசி அரசாங்கமாக இருக்காது என்று குறிப்பிட்டுள்ளார்.

ஊழல் மற்றும் பணவீக்கத்தால் ஏற்பட்ட அமைதியின்மை காரணமாக, இலங்கையின் ஜனாதிபதி பதவி விலகி தப்பி ஓட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது என்று அவர் மேலும் கூறியுள்ளார். (எ-இ)

## காலிமுகத்திடல் போராட்டக்காரர்களுக்கு வெளிநாட்டிலிருந்து பணம் வெளியான தகவல் பொய்!

கொழும்பு, ஜூலை 20

காலி முகத்திடலில் நடத்தப்படும் போராட்டத்தின் ஒருங்கிணைப்பாளர்களுக்கு வெளிநாடுகளில் இருந்து பணம் வழங்கப்பட்டது என்று வெளியான செய்திகள் பொய்யானவை எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதுதொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த குற்றப்புலனாய்வுப் பிரிவினர், இந்தக் குற்றச்சாட்டுக்கள் பொய்யானவை என்பதைக் கண்டறிந்துள்ளனர் என்று கூறப்படுகின்றது.

கொழும்பு - காலிமுகத்திடல் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் சமூக ஊடக ஆர்வலர்களான ரட்டா, திலான் மற்றும் கொனார ஆகியோர் கொழும்பு யூனியன் பிளேஸில் அமைந்துள்ள அரச வங்கி மூலம் 40 மில்லியன் ரூபா பணத்தை வெளிநாட்டில் இருந்து பெற்றனர் என்று தகவல் வெளியாகியிருந்தது. (எ-இ)

## குறைகின்றது பஸ் கட்டணம்!

கொழும்பு, ஜூலை 20

நேற்று நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் வகையில் பஸ் கட்டணங்கள் 2.23 சதவீதத்தால் குறைக்கப்படும் என தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதன்படி குறைந்தபட்ச பஸ் கட்டணம் 38 ரூபாவாக மாற்றியமைக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

எரிபொருள் விலைகள் குறைக்கப்பட்டுள்ள நிலையில் அதற்கு ஏற்றவகையில் பஸ் கட்டணங்களை குறைக்க வேண்டும் என்று தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவுக்கு போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன அறிவுறுத்தல் வழங்கியிருந்தார். அதனடிப்படையில் பஸ் கட்டணங்கள் குறைக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (எ-இ)

## பொருளாதாரத்தை மீட்க இந்தியா உதவி செய்யும்

### இந்தியத் தூதுவர் தெரிவிப்பு




கொழும்பு, ஜூலை 20

இலங்கைக்கு விரைவான மற்றும் பயனுள்ள பொருளாதாரத்தை மீட்டெடுக்க இந்தியா உதவும் என கொழும்பில் உள்ள இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:-

இலங்கையில் இடம்பெறும் மாற்றம் சுமுகமாக இருக்கவேண்டும் என இந்தியா விரும்புகிறது. இலங்கைக்கு கிட்டத்தட்ட 4 பில்லியன் டொலர் உதவிகளை வழங்கிய இந்தியா, பொருளாதாரச் சவால்களுக்கு மத்தியில் பல முதலீட்டைக் கொண்டுவரும் - என்றார். (எ-இ)

## மகளை சித்திரவதை செய்த தந்தை கைது



கொழும்பு, ஜூலை 20

மட்டக்குளிப் பகுதியில் தனது 4 வயது மகளை சித்திரவதை செய்து கொடூரமாக நடத்தினார் என்ற குற்றச்சாட்டில் தந்தையொருவர் நேற்றுமுன்தினம் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சிறுமியின் பாட்டி, சிறுவர் மற்றும் பெண்கள் துஷ்பிரயோக தடுப்பு பணியகத்துக்கு அளித்த முறைப்பாட்டுக்கமைய மட்டக்குளி பகுதியைச் சேர்ந்த 28 வயதுடைய குறித்த தந்தை கைதாகியுள்ளார்.

சந்தேகநபருக்கும் அவரது மனைவிக்கும் இடையில் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக தாயார் கடந்த 5 மாதங்களுக்கு முன்னர் சிறுமியை பாட்டியிடம் ஒப்படைத்துவிட்டு வெளிநாடு சென்றுள்ளார்.

இந்நிலையில் தந்தை பாட்டியின் வீடு சென்று தனது மகளை தன்னுடன் அழைத்துச் சென்று சித்திரவதை செய்துள்ளார் என பொலிஸார் மேற்கொண்ட முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

சிறுமி தற்போது மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் எனவும் சந்தேகநபரை புதுக்கடை நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளார் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சிறுவர் மற்றும் பெண்கள் துஷ்பிரயோக தடுப்பு பணியகம் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றது. (ச-இ)

## மாணிக்கக்கல் அகழ்வு எண்மர் கைது

கொழும்பு, ஜூலை 20

ஹற்றன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் சட்டவிரோதமாக மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட எண்மரை விசேட குற்றத்தடுப்பு பிரிவினர் கடந்த ஞாயிற்றுக்கிழமை கைது செய்துள்ளனர்.

ஹற்றன், ஸ்ரதன் பகுதியில் அனுமதிப் பத்திரமின்றி நீண்ட நாள்களாக சட்டவிரோதமான முறையில் மாணிக்கக்கல் அகழ்வு இடம்பெறுகிறது எனக் கிடைத்த தகவலின் அடிப்படையில் சோதனை மேற்கொள்ளப்பட்டபோதே அவர்கள் கைதாகியுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களை ஹற்றன் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

## வெளிநாட்டுத் தபால் கட்டணமும் மாற்றம்!

கொழும்பு, ஜூலை 20

வெளிநாட்டு தபால் சேவைக் கட்டணத்தை அதிகரிக்க இலங்கை தபால் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி முதல் கட்டணம் அதிகரிக்கப்படும் என்று தபால்மா அதிபர் ரஞ்ஜித் ஆரியரத்ன தெரிவித்துள்ளார்.

அதேவேளை, அமெரிக்கா, நெதர்லாந்து, இஸ்ரேல் மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகளுக்கான தபால் பொருள்களை ஏற்கும் நடவடிக்கைகள் தொடர்ந்தும் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

நிலவும் எரிபொருள் நெருக்கடி காரணமாக நாட்டுக்கான விமானங்களின் சேவைகள் இடைநிறுத்தப்பட்டு உள்ள காரணத்தால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்று தபால்மா அதிபர் குறிப்பிட்டுள்ளார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின் கட்டண திருத்தத்துக்கான முன்மொழிவுக் காலம் நிறைவு

## பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு அறிவிப்பு

**கொழும்பு, ஜுலை 20**

**மின் கட்டண திருத்தத்தை இறுதி செய்யும் செயல்முறைக்கான முன்மொழிவுகளை பொதுமக்கள் சமர்ப்பிக்கும் காலக்கெடு நேற்று நள்ளிரவுடன் முடிவடைந்துள்ளது என இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.**

இது தொடர்பில் இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்ததாவது:-

மின்கட்டண திருத்தம் தொடர்பாக பொதுமக்கள் உட்பட அனைத்து தரப்பினரும் தங்கள் கருத்துக்களையும் முன்மொழிவுகளையும் சமர்ப்பிக்கவேண்டுமென்று ஆணைக்குழு கேட்டுக்கொண்டது. இதுவரை 150 முன்மொழிவுகள் பெறப்பட்டுள்ளன. எழுத்துபூர்வ கருத்துக்களைப் பெறுவதற்கான கடைசித் திகதி ஜுலை 18 என அறிவிக்கப்பட்டிருந்தது.

தற்போது பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு மின் கட்டணத் திருத்தத்தை இறுதிசெய்யும் பணியில் ஈடுபட்டு வருகின்றது. அதன்படி பொதுக்கலந்தாய்வை எதிர்வரும் ஜுலை 28ஆம் திகதி நேரில் நடத்த ஆணையம் முடிவு செய்துள்ளது.

திருத்தியமைக்க உத்தேசித்துள்ள கட்டணங்களை விவாதித்து இறுதி செய்ய இலங்கை மின்சார சபை மற்றும் எரிசக்தி அமைச்சு ஆகியவற்றை, இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அழைக்கும். இந்தத் திருத்தம் எந்தவொரு தனிநபரின் விருப்பத்தின்படி அல்லாது மாறாக ஏற்றுக்கொள்ளப்பட்ட அறிவியல் முறைப்படி திருத்தம் செய்யப்படும் -என்றார். (ச-இ)



ஞானம் பவுண்டேசன் நிதிப் பங்களிப்பில் லண்டன் உதவும் கரங்கள் அமைப்பின் ஊடாக மன்னார் - விடத்தல்தீவில் வசிக்கும் 4 கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த 396 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருள்கள் மன்னார் தூய யோசப் வாஸ் மகா வித்தியாலயத்தின் பிரதான மண்டபத்தில் அண்மையில் வழங்கப்பட்டது. இலங்கைக்கான உதவும் கரம் அமைப்பின் இணைப்பாளரும் சாவகச்சேரி பிரதேசசபையின் உறுப்பினருமான இ.சுதாகர் நேரடியாகச் சென்று இதனை வழங்கினார். (ய-159)

## பாசிப்பயறு உற்பத்திக்கு 1,250 பயனாளிகள் தெரிவு

யாழ்ப்பாணம், ஜுலை 20

யாழ்.மாவட்டத்தில் ஆயிரத்து 250 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு பாசிப்பயறு உற்பத்தி முன்னெடுக்கப்படவுள்ளது என்று வடமாகாண பிரதி விவசாயப் பணிப்பாளர் அஞ்சனாதேவி ஸ்ரீரங்கன் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:-

விவசாயிகளுக்கும், அவர்களது குடும்ப உறுப்பினர்களுக்கும் போஷாக்கை மேம்படுத்துவதற்கு பரவலாக்கப்பட்ட பாசிப்பயறு உற்பத்தி மேற்கொள்ளப்படவுள்ளது. வடமாகாண விவசாயத் திணைக்களம், உணவு விவசாய நிறுவனம் ஆகியவற்றின் அனுசரணையுடன் இந்த பாசிப்பயறு உற்பத்தி ஆரம்பிக்கப்படவுள்ளது.

அதற்கமைய கீரிமலை, அம்பன், கரவெட்டி, சண்டிலிப்பாய், உடுவில், நல்லூர், தொல்புரம், சாவகச்சேரி, உரும்பிராய், கைதடி, புத்தூர், புலோலி ஆகிய கமநல சேவை நிலையங்களில் ஆயிரத்து 250 பயனாளிகள் பாசிப்பயறு உற்பத்திக்குத் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

பாசிப்பயறு உற்பத்திக்கு கடந்த இரண்டு வருடங்களாகப் பதிவு செய்யப்பட்ட பச்சைப்பயறு விவசாயத்துக்காகவும், அடுத்து வரும் இடைப் பருவத்தில் விளைச்சலுக்குத் தயாராக இருப்பவராகவும் இருத்தல், கால் ஏக்கருக்கு கூடுதலாகவும் ஒரு ஏக்கருக்குக் குறைவான அல்லது சமமான காணியை சொந்தமாகவோ அல்லது குத்தகையிலோ வைத்திருத்தல், பொருண்மியம் நலிந்த சமுர்த்திப் பயனாளியாக இருத்தல் போன்ற நிலையில் உள்ளோரே தெரிவுசெய்யப்படுவர். அத்துடன் பச்சைப்பயறு விவசாயிகளுக்கும், பதிவு செய்யப்பட்ட போசாக்குக் குறைவான பிள்ளைகள் உள்ள பச்சைப்பயறு விவசாய குடும்பங்களுக்கும் மாற்றுதிறனாளிகளுக்கும் முன்னுரிமையளிக்கப்படும்.

இது தொடர்பான மேலதிக விவரங்களுக்கு தங்கள் பகுதி விவசாய போதனாசிரியர்களிடம் அல்லது, யாழ்.பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் பணிமனையுடன் தொடர்புகொள்ளளாம் -என்றார். (எ-14-20)

## ஆரியகுளம் நடுவே தமிழன்னைக்கு சிலை!

யாழ்ப்பாணம், ஜுலை 20

ஆரியகுளத்தின் நடுவே, தமிழன்னைக்கு 25 அடி உயரத்துக்குக் குறையாத சிலை ஒன்றை நிறுவவேண்டுமென்று யாழ்ப்பாணம் மாநகர சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தமிழன்னையின் சிலையை வடிவமைப்பதற்கான பொறுப்பு கலை, பண்பாட்டுக் குழுவுக்கு வழங்கப்பட்டுள்ளது. எவரேனும் நிதியுதவி செய்ய முன்வந்தால் சிலையை வடிவமைக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் என்று யாழ்ப்பாணம் மாநகர முதல்வர் தெரிவித்தார். (எ-20)

## இலவச தையல் பயிற்சிக்கு விண்ணப்பங்கள் கோரல்

சாவகச்சேரி, ஜுலை 20

பொருண்மியம் நலிந்த கல்விகற்ற பெண்களுக்கு இலவச தையல் பயிற்சிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்தப் பயிற்சிநெறி கொடிகாமம், மத்தி கிராம அபிவிருத்தி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. பயிற்சி நெறிக்கு 18 தொடக்கம் 35 வயதுக்குட்பட்ட பெண்கள் விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பப்படிவங்களை பிரதேச செயலக கிராம அபிவிருத்தி அலுவகத்தில் பெற்று, விண்ணப்பதாரர்கள் வறுமை கோட்டுக்கு உட்பட்டவர்கள் என்பதை கிராம அலுவலர் பரிந்துரை செய்த பின்னர் விண்ணப்பம் அனுமதிக்கப்படும்.

அத்துடன் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 5 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவேண்டும்.

இது தொடர்பான மேலதிக தகவல்களுக்கு 0769318695 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-14-159)



## விபுலானந்தர், பாரதியார் சிலைகளுக்கு அடிக்கல்

யாழ்ப்பாணம், ஜுலை 20

யாழப்பாணத்தில் அமைக்கப்படவுள்ள விபுலானந்தர் மற்றும் பாரதியார் சிலைகளுக்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்றுமுன்தினம் மாலை நடைபெற்றது.

சுவாமி விபுலானந்தரின் 75ஆவது குருபூசை தினமான நேற்றுமுன்தினம் பிற்பகல் 3 மணிக்கு யாழ்ப்பாணம் மானிப்பாய் வீதியில் அமைந்துள்ள சுற்றுவட்ட வளைவில் சிலைகளுக்கான அடிக்கல் நடப்பட்டது.

சைவ மகாசபை மற்றும் யாழ்ப்பாணம் மாநகர சபை ஆகிய இணைந்து இந்த நிர்மாணப் பணிகளை முன்னெடுக்கவுள்ளன.

அடிக்கல் நடும் நிகழ்வில் யாழ். மாநகர முதல்வர் வி.மணிவண்ணன், யாழ். மாநகர ஆணையாளர் இ.த.ஜெயசீலன், அகில இலங்கை சைவ மகா சபையின் தலைவர் பரா.நந்தகுமார், யாழ். மாநகர சபை உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (எ-20)

## மழைக்கு சாத்தியம்

வடமேல், மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் கண்டி, நுவரெலியா, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் மழை பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

இதேவேளை- ஊவா, கிழக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களிலும் முல்லைத்தீவு மாவட்டத்திலும் பல இடங்களில் பிற்பகல் அல்லது இரவு வேளையில் மழை அல்லது இடியுடன் கூடிய மழையும், புத்தளத்திலிருந்து கொழும்பு மற்றும் காலி ஊடாக மாத்தறை வரையான கடற்கரைக்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளில் பரவலாகவும் மழை பெய்யக்கூடும்.

கொழும்பில் இருந்து காலி மற்றும் அம்பாந்தோட்டை வரையான கரையோரத்துக்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளில் அவ்வப்போது ஓரளவு கொந்தளிப்பாகக் காணப்படும். நாட்டைச் சூழவுள்ள ஏனைய கடற்பரப்புகளில் மிதமானதாக இருக்கும் என தெரிவிக்கப்படுகிறது.

மின்னல் தாக்கம், கொந்தளிப்பு போன்றவற்றால் ஏற்படக்கூடிய பாதிப்புகளைக் குறைத்துக்கொள்ளத் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளுமாறு வளிமண்டலவியல் திணைக்களத்தால் பொதுமக்களுக்குக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ய-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## தருணமறிந்து செயலாற்றுக!

**தெ**ற்கில் அரசியல் பரபரப்பாக இருக்கின்றது. கோத்தாபய ராஜபக்சவின் வெளியேற்றத்துடன் வெற்றிடமாகியுள்ள ஜனாதிபதிக் கதிரைக்கான போட்டி சூடு பிடித்திருக்கும் நிலையில் இன்று நாடாளுமன்றத்தில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டு இடைக்கால ஜனாதிபதியாக ரணில் அல்லது டலஸ் ஆகிய இருவரில் ஒருவர் தெரிவுசெய்யப்படவுள்ளனர். தலைகீழாக நின்றாலும் அநுர ஜனாதிபதியாகத் தெரிவாக வாய்ப்பேயில்லை.இந்த நிலையில், தெற்கு அரசியல் கட்சிகள் தங்கள் வாக்குப் பலத்தை வைத்து பேரம் பேசல்களில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றன. எதிர்பாராத திருப்பங்களும், எதிர்பாராத கூட்டணியும் என்றவாறாகப் பதகளிப்பட்டுக் கொண்டிருக்கின்றது கொழும்பு. ஆனால் சிறுபான்மைக் கட்சிகளின் நிலைமை அதற்கு எதிர்மாறாக இருக்கின்றது.

அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு வழமையாக சிறுபான்மைக் கட்சிகளின் தயவை வேண்டி நிற்கும் பெரும்பான்மைக் கட்சிகள் இந்தமுறை, சிறுபான்மைக் கட்சிகளை கவனத்தில் எடுக்கவேயில்லை என்று தெரிகின்றது. ஜனாதிபதி வேட்பாளர்களாகக் களமிறங்கியிருக்கும் வேட்பாளர்கள் எவரும் தமிழ் மக்கள் பற்றி வாயே திறக்கவில்லை. தேசிய இனப்பிரச்சினை தொடர்பாக மூச்சும் விடவில்லை.


இந்தப் பின்னணியில் எந்த வழியில் செல்வது என்ற குழப்பத்தில் கூடிக் கூடி ஆராய்ந்து கொண்டிருக்கும் தமிழ்க் கட்சிகள் – தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உட்பட இன்னமும் தங்கள் முடிவுகளை அறிவிக்கவில்லை. இன்று வாக்கெடுப்பு நடக்கவிருக்கும் நிலையில் எவருக்கும் வாக்களிக்காது ஒதுங்கியிருக்க வேண்டிய நிலைமையே சிறுபான்மைக் கட்சிகளுக்கு ஏற்படலாம். ஒதுங்கி நின்று வேடிக்கை பார்க்கவேண்டி நேரலாம். இந்தநிலைமை தமிழ் மக்களின் எதிர்காலத்துக்கு ஆரோக்கியமானதாக இருக்காது. வடக்கு, கிழக்கு தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமிழ் மக்களுக்கான தீர்வைப் பெறுவதற்குச் சரியான வழியில் செல்கிறார்களா என்ற கேள்வியும் இந்தச் சந்தர்ப்பத்தில் ஏற்படுகின்றது.

வடக்கு, கிழக்கு அரசியல் என்பது இப்போது தேர்தல் அரசியலாக மாறியுள்ளமை தெளிவாகத் தெரிகின்றது. தேர்தல் காலங்களில் மட்டுமே அரசியல்வாதிகளைக் காண முடிவதும், தேர்தல் முடிந்த பின்னர் அவர்களின் அறிக்கைகளை மட்டுமே காண முடிவதும் வாடிக்கையாகவிருக்கின்றது. முக்கியமான தருணங்களில் மக்களுக்குச் சரியான வழியைக் காட்டவோ, முன்னின்று செயலாற்றவோ தவறிவிடுகின்றனர். நாட்டில் இப்போது ஏற்பட்டுள்ள சூழ்நிலையை தமிழ் மக்களுக்குச் சாதமாக்கி காரியங்களைச் சாதித்துக் கொள்ளத் தவறியிருக்கின்றனர்.இம்முறையும் ரணிலுக்கும், டலஸ் அழகப்பெருமவுக்கும் இடையிலான ஆதரவு எண்ணிக்கை மிக நெருக்கமாக உள்ள நிலையில், தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் வாக்குகள் யாருக்கு கிடைக்கின்றனவோ அவரே ஜனாதிபதியாக வருவதற்கு வாய்ப்புகள் அதிகம். இந்த எண் அரசியலை சுட்டிக்காட்டி, ரணில் அல்லது டலஸ் ஆகியோரிடம் தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பது பற்றிய பேரம் பேசல்களில் கூட்டமைப்பு ஈடுபட்டிருக்கவேண்டும். ஆனால் வழக்கம் போல இம்முறையும், 'யாருக்கு ஆதரவளிப்பது?' என்று கூட்டமைப்பு தனக்குள் கலந்து பேசிக்கொண்டிருந்ததே தவிர, எந்தவொரு வேட்பாளருடனும் பேரம் பேசலில் ஈடுபடவேயில்லை.

நாட்டின் அரசியல் கலாசாரத்தை – மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்று தெற்கில் எழுந்துள்ள அலையில், தமிழ் மக்களின் அபிலாஷைகளையும் உட்புகுத்தி, காரியமாற்ற வேண்டியதே இப்போதுள்ள தேவை. நாட்டின் இப்போதைய நிலைமையைச் சாதகமாக்கி தமிழ் மக்களுக்கான தீர்வுக்கான வெளிநாட்டு அழுத்தங்களை வழங்குவதற்கான செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும். இந்தச் சந்தர்ப்பங்களைத் தவறவிட்டு– வெறுமனே அறிக்கை அரசியல் செய்து – நாடாளுமன்றத்தில் அனல் பறக்க உரையாற்றுவதால் மட்டும் தமிழ் மக்களுக்கு எந்தவிதப் பயனும் கிடைக்கப் போவதில்லை என்பதே உண்மை. அதை உணர்ந்து செயலாற்றாவிட்டால் தெற்கில் இப்போது நடப்பதுபோல இனிமேல் வடக்கிலும் நடந்துவிடக்கூடும்.

**நாளொரு நல்வார்த்தை**

"தனக்குத்தானே உதவிக் கொள்ளாமல் எவனாலும் அடுத்தவனுக்கு உதவ முடியாது என்பது உலகின் மிக அழகிய இயல்புகளில் ஒன்று" - **எமர்சன்**



# பொது மக்கள் மீது பலத்தை பிரயோகிப்பதை நிறுத்துக!

## *உலகளாவிய குடியியல் சமூகக் கூட்டமைப்பு அதிருப்தி*

**கொழும்பு, ஜூலை 20**

**கடந்த 13ஆம் திகதி பிரதமர் அலுவலகத்தாலும், நேற்று முன்தினம் பதில் ஜனாதிபதியாலும் அவசரகால நிலையைப் பிரகடனப்படுத்தப்பட்டமை தொடர்பில், உலகளாவிய குடியியல் சமூகக் கூட்டமைப்பு தமது அதிருப்தியை வெளியிட்டுள்ளது.**

சமூகத்தின் அதிருப்தியை நசுக்குவதற்கும், அமைதியான முறையில் ஒன்று கூடும் சுதந்திரத்துக்கான உரிமையைப் பறிப்பதற்கும் அவசரகாலச் சட்டத்தைப் பயன்படுத்துவதைத் தவிர்க்க வேண்டும் என்று சிறிலங்கா அதிகாரிகளை அந்த அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

தேசியப் பாதுகாப்பு என்ற பெயரில் போராட்டங்களை ஒடுக்க அதிகாரிகள் மீண்டும் அவசரகாலச் சட்டங்களைப் பயன்படுத்தியிருப்பது கவலையளிக்கிறது. முந்தைய அவசரகால நிலைகளின் போது நூற்றுக்கணக்கானோரின் தன்னிச்சையான கைதுகள், எதிர்ப்பாளர்களுக்கு எதிராக அதிகப்படியான பலாத்காரம் மற்றும் தடுப்புக் காவலில் சித்திரவதை அல்லது மோசமாக நடத்தப்பட்ட சம்பவங்கள் இடம்பெற்றன. அதனால் அதிகாரிகள் அவசரகால நிலையை உடனடியாக நீக்கவேண்டும்.

அடிப்படைச் சுதந்திரங்கள் மீதான அனைத்துக் கட்டுப்பாடுகளையும் முடிவுக்குக் கொண்டுவரவேண்டும். அத்துடன் எதிர்ப்பாளர்களை இழிவுபடுத்துவதை நிறுத்த வேண்டும் என்று உலகளாவிய சிவில் சமூகக் கூட்டமைப்பின் ஆசிய பிராந்திய சட்டத்தரணி மற்றும் பரப்புரை அதிகாரி கொர்னேலியஸ் ஹனுங் கோரியுள்ளார்.

எதிர்ப்பாளர்களுக்கு எதிரான மீறல்கள் ராஜபக்ச நிர்வாகத்தின் கீழ் குடியியல் சமூகத்தின் மீதான தாக்குதல்களின் ஒரு பகுதியாகும். போரில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் குடும்பங்கள் மற்றும் குடியியல் சமூக அமைப்புக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட மோதல் கால குற்றங்களுக்கு அதிகாரிகள் பொறுப்பாக்கத் தவறின. சட்டம் ஒழுங்கை பராமரிப்பது மற்றும் பாதுகாப்புப் படையினரால் இதர துஷ்பிரயோகங்களை நடத்துவது என்ற போலிக் காரணத்தின்கீழ் எதிர்ப்பாளர்களுக்கு எதிராக அதிகப்படியான பலத்தை தொடர்ந்து பயன்படுத்துவதை நிறுத்த வேண்டும்.

எந்தவொரு புதிய அரசாங்கமும் இந்த மீறல்கள் அனைத்துக்கும் ஒரு சுயாதீனமான மற்றும் பாரபட்சமற்ற விசாரணையை உறுதிப்படுத்த வேண்டும் என்றும் கொர்னேலியஸ் ஹனுங் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, 2022 ஜூன் மாதம் குடிமைச் சுதந்திரங்களில் விரைவான சரிவைக் கண்ட நாடுகளின் கண்காணிப்புப் பட்டியலில் இலங்கை சேர்க்கப்பட்டுள்ளது என்று உலகளாவிய சிவில் சமூகக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

(எ-இ)

**நாளை** 21.07.2022 வியாழக்கிழமை ஆடி 05

சுபநேரம் : 07.31 - 09.01
ராகுகாலம்: 01.31 - 03.01

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் கலாசாரத்தை மாற்ற அனைவரும் ஒன்றிணைவோம்

## சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு

**கொழும்பு, ஜூலை 20**

**இலங்கையின் அரசியல் கலாசாரத்தை மாற்றிய மைக்க அனைவரும் ஒன்றிணையவேண்டிய தருணம் இது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.**



ஜனாதிபதி வேட்பாளர் டலஸ் அழகப்பெருமவுடன் இணைந்து நேற்று வெளியிட்டுள்ள விசேட காணொலியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நாட்டிலுள்ள மக்கள் அனைவரும் இன்று வீதிகளில் இறங்கிப் போராடி வருகிறார்கள். அரசியல் கலாசாரத்தை மாற்றவேண்டும் என்பதே அவர்களின் கோரிக்கையாக இருக்கிறது. நாம் அனைவரும் இலங்கையர் என்ற ரீதியில் ஒன்றிணைய வேண்டும். சவால்களை ஒன்றிணைந்து முகங் கொடுக்கவேண்டும்.

மக்கள் அரசமைப்பு மாற்றமொன்றை எதிர்பார்க்கிறார்கள். 19 ஆவது திருத்தத்தை மீண்டும் கொண்டுவர வேண்டும் என நினைக்கிறார்கள். இதை நிறைவேற்றவேண்டும். பெரும்பான்மையான மக்கள் இன்று எம்முடன் இருக்கிறார்கள். இந்தப் பலத்துடன் நாம் நாட்டையும் கட்டியெழுப்பவேண்டும்.

எமது பயணம் கடினமானதாக இருந்தாலும் இதனை செய்து முடிக்க வேண்டிய பொறுப்பு எமக்குள்ளது - என்றார்.

அதேவேளை, காணொலியில் கருத்துத் தெரிவித்த டலஸ் அழகப்பெரும, இப்போது ஆரம்பித்துள்ளது ஒருமித்த பயணத்துக்கான ஆரம்பமாகும். மக்களின் வாழ்க்கையைக் கட்டியெழுப்ப அர்ப்பணிப்புடன் செயற்படுவேன் என்று கூறியுள்ளார். (எ-இ)

## அவசரகால சட்ட விதிகள் விசேட வர்த்தமானியில்!

கொழும்பு, ஜூலை 20

பொதுப் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் பிரிவு 5 இன் கீழ் அவசரகாலச் சட்ட விதிகள் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளன. இதற்கான அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் வெளியிடப்பட்டுள்ளது. அவசரகாலச் சட்டங்கள் பொது அத்தியாவசிய சேவைகள், நுழைவு உரிமை, தேடுதல் மற்றும் கைது செய்யும் உரிமை, குற்றங்கள் மற்றும் தண்டனைகள், விசாரணைகள் மற்றும் சோதனைகள் மற்றும் இதர விவரங்கள் தொடர்பான ஏழு பகுதிகள் பிரகடனத்தில் விவரிக்கப்பட் டுள்ளன.

பொதுப் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் 2 ஆவது பிரிவின் கீழ் இலங்கையில் நேற்றுமுன்தினம் பொது அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டது.

ஜனாதிபதியின் செயலாளர் காமினி செனரத் வெளியிட்டுள்ள அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் பொதுப் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகள் நேற்றுமுன்தினம் முதல் இலங்கை முழுவதும் நடைமுறைக்கு வரும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொதுப் பாதுகாப்பு, பொது ஒழுங்கைப் பாதுகாத்தல் மற்றும் சமூகத்தின் வாழ்க்கைக்கு அத்தியாவசியமான பொருள்கள் மற்றும் சேவை களைப் பேணுதல் ஆகியவற்றின் நலன்களுக்காக இலங்கையில் பொது அவசரநிலை பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது. (எ-இ)


## தவறிவிட்டது

யாழ். பால் பண்ணை வீதியில் இருந்து பலாலி வீதி, வேம்படிச் சந்திக்கும் இடையில் செல்வேந்திரன் சுலக்ஸ்மன் மற்றும் கார்திகா சுலக்ஸ்மன் ஆகிய இருவரின் தேசிய அடையாள அட்டை மற்றும் சாரதி அனுமதிப்பத்திரம் மேலும் ஆவணங்களுடன் பேர்ஸ் ஒன்று தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து தொடர்புகொள்ளவும்.

(தகுந்த சன்மானம் வழங்கப்படும்)

077 169 7675

(cs.20027) (2.6)

## மணமகன் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பம் 1996 இல் பிறந்த [BSc (Hons) Computer Scinece Software Engineer] சதய நட்சத்திரம். கிரகபாவம் 18. 10 ஆம் இடத்தில் சூரியன் செவ்வாய் கொண்ட மணமகளுக்கு பட்டதாரி மணமகனை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

(காரைநகர் பிரதேசம் விரும்பத்தக்கது)

076 732 1180

(cs.20025) (2.6)

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



கடந்த (21.06.2022) அன்று
சிவபதமடைந்த
எங்கள் குடும்பத் தலைவர்

### செல்வவிநாயகம் சூரியகுமார்

(ஓய்வு பெற்ற
ஆங்கில பாட ஆசிரியர்)

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் நாளை (21.07.2022) வியாழக்கிழமை காலை 5.00 மணியளவில் கீரிமலை தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனை தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அன்னாரின் மரணச் செய்தியறிந்து நேரிலும், தொலைபேசி ஊடாகவும் ஆறுதல் தெரிவித்த உள்நாட்டு, வெளிநாட்டு உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதோடு துண்டுப் பிரசுரம், மலர்வளையம், பதாகைகள் மூலம் துயர்பகிர்ந்த அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

கும்பவாழி இமையாணன் மேற்கு,
உடுப்பிட்டி.

குடும்பத்தினர்.

## 25ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 30 08 1961

மறைவு 25 07 1997

அமரர்

### கனகரத்தினம் சத்தீஸ்வரி

திதி : சப்தமி

வந்தவரெல்லாம் போவது உண்மை.
விதியென ஒன்று உண்டென அறிந்தோம்
இருந்தும் மனம் ஏற்குதில்லை நீங்கள் மறைந்து
இருபத்தைந்து ஆண்டுகள் ஆனதுவோ!
உங்களை நினைத்து தினம் தினம் நாங்கள் ஏங்கித்
தவிக்கின்றோம்
காலங்கள் ஓடிக் கடந்தாலும்.
உங்களை எங்கள் உள்ளத்தில் வைத்துப் பூசிப்போம்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி !!!

உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.
கைதடி கிழக்கு, கைதடி.

வேலவன் ஹாட்வெயார்
வேலவன் அரிசி ஆலை
கைதடி.

(CS20026) 1-6


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



















கணவனுக்கு தேவை
பெற்றோல்
மனைவிக்கு தேவை
எரிவாயு
பிள்ளைக்கு தேவை
அங்கர்
இது மூன்றும் அமைவதே
இன்று மகிழ்ச்சியான
வாழ்க்கை

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** இன்று உங்கள் அணுகுமுறையில் உறுதி அவசியம். அதிக பணிகள் காணப்படும். அது உங்களுக்கு கவலை அளிக்கும். நிதி வளர்ச்சி காண சிறப்பான நாள் அல்ல.

**இடபம்:** உங்கள் செயல்களை சுமுகமாக மேற்கொள்ள நீங்கள் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டியது அவசியம். இன்று பணிகள் அதிகமாக காணப்படும். கவனமாக செயற்பட வேண்டும்.

**மிதுனம்:** இன்று நீங்கள் உங்கள் உண்மையான ஆற்றலை அறிந்து கொள்வீர்கள். திறமையாக பணியாற்றுவீர்கள். உங்களிடம் காணப்படும் உறுதி வெற்றிக்கு உதவும்.

**கடகம்:** உங்கள் விருப்பங்களை பூர்த்தி செய்துகொள்வதற்கு பொதுவான இலக்கை நோக்கி செயற்படவும். அறிவார்ந்த முறையில் பணி செய்தால் மட்டுமே வெற்றி காண இயலும். ஆரோக்கியம் குன்றும்.

**சிம்மம்:** இன்று உங்களுக்கு சாதகமான நாளாக அமையாது. பணிகள் இறுக்கமாகக் காணப்படும். குழப்பமான மன நிலை உண்டாகும். துணைக்கு ஆரோக்கியக் குறைவு காணப்படும்.

**கன்னி:** அதிர்ஷ்டம் உங்கள் பக்கம் காணப்படும். நீங்கள் பயனுள்ள முடிவுகளை எடுக்க இயலும். பணிகளை விரைந்து முடிப்பீர்கள். நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். சேமிப்பு உயரும்.

**துலாம்:** பணியைப் பொறுத்தவரை சிறப்பான நிலை காணப்படும். துணையுடன் நல்ல புரிந்துணர்வு கொண்டிருப்பீர்கள். உங்கள் சேமிப்பு நிலை உயரும். ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

**விருச்சிகம்:** இன்று புதிய நண்பர்களை பெறுவீர்கள். இதனால் உங்கள் சமூக வட்டாரம் விரிவடையும். விடயங்களை சகஜமாக எடுத்துக்கொண்டு உங்கள் பணிகளை முடிப்பீர்கள். இன்று மகிழ்ச்சிகரமாக இருக்கும்.

**தனுசு:** இன்று நீங்கள் பதற்றப்படலாம். இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள் அல்ல. பணியும் முயற்சியும் வெற்றியைப் பெற்றுத் தராது. துணையுடன் வாக்குவாதம் செய்வீர்கள். நிதி நிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்கும்.

**மகரம்:** இன்று உங்களுக்கு சாதகமான நாள் அல்ல. சகபணியாளர்களுடன் கவனமாக உறவாடவும். மோதல்கள் ஏற்பட வாய்ப்புள்ளதால் உங்கள் துணையுடன் பேசுவதைத் தவிர்ப்பது நல்லது.

**கும்பம்:** இன்று உங்கள் பொறுப்புகளை நிறைவேற்றுவீர்கள். உங்கள் பணிக்கு நற்பெயர் எடுப்பீர்கள். பணி சம்பந்தமான பயணம் காணப்படும். பணவரவு உண்டாகும்.

**மீனம்:** குடும்பத்தினருடன் சுப நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். சொத்துப் பிரச்சினைக்கு நல்லதீர்வு கிடைக்கும். அதிகாரப் பதவியில் இருப்பவர்களின் நட்பு கிடைக்கும்.

## ஹற்றனில் குண்டுப் புரளி

கொழும்பு, ஜுலை 20

ஹற்றன் பிரதான பேருந்து நிலையத்தில் சந்தேகத்துக்கிடமான பெரிய பயணப்பை ஒன்று கண்டெடுக்கப்பட்டதை அடுத்து ஹற்றன் நகரில் நேற்று வெடிகுண்டு பீதி ஏற்பட்டது.

நேற்றுமுன்தினம் மாலை இந்த இடத்தில் பெரிய கறுப்பு நிறப் பயணப்பை ஒன்று காணப்பட்டது. அதில் வெடிபொருள்கள் இருக்கலாம் என சந்தேகம் எழுந்ததையடுத்து, சந்தேகத்துக்கிடமான பை ஹற்றன் பொலிஸ் நிலையத்துக்கு பாதுகாப்பாகக் கொண்டு செல்லப்பட்டது. அதனை ஆராய்ந்தபோது, அந்தப் பையில் ஆடைகள் இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது. (எ-இ)



# நடமாடும் மருத்துவ சேவை நடத்தக் கோரிக்கை

முல்லைத்தீவு, ஜுலை 20

முல்லைத்தீவு மாவட்டத்தில் நடமாடும் மருத்துவ சேவையை முன்னெடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று முல்லைத்தீவு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கரைதுறைப்பற்று - ஆறுமுகத்தான்குளம் கிராமத்துக்கும் ஒட்டுசுட்டான் ஒதியமலை, அம்பகாமம் போன்ற பல கிராமங்களுக்கும் மாந்தை கிழக்கு சிறாட்டிக்குளம் போன்ற பல கிராமங்களுக்கும் துணுக்காய், ஐயன்கன்குளம், பழைய முறிகண்டி, தேராங்கண்டல், புத்துவெட்டுவான், அமதிபுரம், ஆரோக்கியபுரம், அம்பலப்பெருமாள்குளம், கோட்டைக்கட்டியகுளம், தென்னியங்குளம், உயிலங்குளம், புதுக்குடியிருப்பு போன்ற பிரதேசங்களுக்கும் பஸ் சேவை இடம்பெறுவதில்லை. இதனால் மருத்துவமனைகளுக்குச் செல்வதற்கு அந்தப்பகுதி மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

பஸ் சேவைகள் உள்ள கிராமங்களுக்கே தற்போதைய எரிபொருள் நெருக்கடியால் போக்குவரத்துச் சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன. இந்தநிலையில் மக்களின் நலனைக் கருத்திற்கொண்டு போக்குவரத்து வசதிகளற்ற கிராமங்களுக்கு குறைந்தது 15 நாள்களுக்கு ஒரு தடவையேனும் நடமாடும் மருத்துவ சேவையை நடத்துவதற்கு மாவட்ட சுகாதாரப் பணிப்பாளர் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-14.13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீர்வுகளைக் கூறவேண்டும் ஜனாதிபதி வேட்பாளர்கள்

## சம்பிக்க வேண்டுகோள்



கொழும்பு, ஜூலை 20

**ஜனாதிபதி பதவிக்குப் போட்டியிடும் வேட்பாளர்கள் நாட்டின் பிரச்சினைகளுக்கு அடுத்த 24 மணிநேரத்தில் தீர்வை முன்வைக்கவேண்டும். மக்களின் தற்போதைய உணர்வுகளை அவர்கள் புரிந்துகொண்டால் வேட்புமனுக்கள் மற்றும் தேர்தல்கள் தேவைப்படாது.**

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தற்போதைய சூழ்நிலையில் அரசியல் நோக்கங்களை புறமொதுக்கி விட்டு மக்களின் குறைகளை நிவர்த்தி செய்யக்கூடிய ஜனாதிபதி ஒருவரை நியமிக்கவேண்டும்.

அனைவரும் ஒருமித்த கருத்துக்கு வந்து மக்களுக்கு முன்னுதாரணமாக அனைத்துக் கட்சி ஆட்சியை அமைக்கவேண்டும்.

மக்களின் உணர்வுகளை அவர்கள் எதிர்கொள்ளும் நெருக்கடிகளைப் புரிந்துகொண்டாலேயே வேட்புமனுக்கள் மற்றும் தேர்தல்கள் தேவைப்படாது - என்றார். (ச-இ)

# ரணிலுக்கு எதிரான மனுவை நிராகரித்தது உயர் நீதிமன்று

கொழும்பு, ஜூலை 20

ரணில் விக்கிரமசிங்கவின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி செல்லாது எனத் தாக்கல் செய்யப்பட்ட மனுவை நிராகரித்து உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

நாகாநந்த கொடிதுவக்கால் உயர்நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட இந்த மனு தொடர்பான தீர்ப்பு நேற்று அறிவிக்கப்பட்டிருந்தது. இந்த வழக்கு நேற்று காமினி அமரசேகர, ஷிரான் குணரத்ன, ஜனக் டி சில்வா ஆகிய நீதியரசர்கள் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே மனு நிராகரிக்கப்பட்டது.

பொதுத் தேர்தலில் போதிய வாக்குகளைப் பெறத் தவறிய ஒருவர், அரசமைப்பின் 14 ஆவது திருத்தத்தின் பிரகாரம் தேசியப்பட்டியல் ஊடாக நாடாளுமன்றத்துக்கு பிரவேசிக்க முடியாது என சுட்டிக்காட்டி, சட்டத்தரணி நாகாநந்த கொடிதுவக்கு இந்த மனுவைத் தாக்கல் செய்தார்.

தேசியப் பட்டியல் ஊடாக நியமிக்கப்பட்ட உறுப்பினர்களின் பெயர்களை தேர்தல் முடிந்து ஒரு வாரத்துக்குள் தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்க வேண்டியது சட்டரீதியான தேவை. ஆனால், 2020 பொதுத் தேர்தல் நடத்தப்பட்டு பல மாதங்களுக்குப் பின்னரே பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பெயர் சமர்ப்பிக்கப்பட்டது என்றும் அந்த மனுவில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியல் ஊடாக ரணில் விக்கிரமசிங்கவை நியமித்தமை அரசமைப்பை மீறும் செயலாகும் என்றும் அவர் நாடாளுமன்ற உறுப்பினராகவும் பதில் ஜனாதிபதியாகவும் நியமிக்கப்பட்டமை சட்டவிரோதமானது என்றும் அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டிருந்தது. (எ-இ)

# எம்.பி.க்களுக்கு அச்சுறுத்தல்; துரித விசாரணைக்கு பணிப்பு

## சபாநாயகர் நாடாளுமன்றில் தகவல்

கொழும்பு, ஜூலை 20

சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்தி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டமை தொடர்பில் விசாரணையை துரிதப்படுத்துமாறு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன பொலிஸ்மா அதிபருக்கு அறிவுறுத்தியுள்ளார்.

சமூக ஊடகங்கள் ஊடாக சிலர் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அழுத்தங்களைப் பிரயோகித்து அடுத்த ஜனாதிபதியை தெரிவு செய்வதற்காக சுதந்திரமாக வாக்களிக்கும் உரிமைக்கு இடையூறு விளைவிக்க முயற்சிக்கப்படுகிறது எனக் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான வேட்புமனுத் தாக்கல் நேற்று நாடாளுமன்றில் இடம்பெற்றது. இன்று வாக்கெடுப்பு நடத்த நாடாளுமன்றத்தால் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்தநிலையில் நாடாளுமன்ற விதிகளின் பிரகாரம் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரிடம் முறையற்ற விதத்தில் அழுத்தம் பிரயோகிப்பது தண்டனைக்குரிய குற்றமாகும். இதுதொடர்பில் விசாரணை நடத்துமாறு பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் பணிப்புரை விடுத்துள்ளார்.

அதற்கமைய கணினி குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணை நடத்தி, புதுக்கடை நீதிவான் நீதிமன்றில் சமர்ப்பித்த 'பி' அறிக்கை மூலம் விசாரணைகளை துரித கதியில் முன்னெடுக்குமாறு சபாநாயகர் மஹிந்த யாப்பா கோரியுள்ளார். (ச-இ)

# வேட்பாளர்களின் சொத்துவிவரம் பகிரங்கப்படுத்தப்படவேண்டும்!

கொழும்பு, ஜூலை 20

நாட்டின் அடுத்த ஜனாதிபதியைத் தேர்ந்தெடுப்பதற்காக முக்கியமான நாடாளுமன்ற வாக்கெடுப்புக்கு முன்னதாக, ஜனாதிபதி வேட்பாளர்கள் தங்கள் சொத்துக்களைப் பகிரங்கப்படுத்த வேண்டும் என்று சிறிலங்கா ட்ரான்பரன்ஸி இன்ரநஷனல் வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பாக அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஊழல் தலைவர்களை இனியும் சகித்துக் கொள்ள மாட்டோம் என்ற தெளிவான செய்தியை இலங்கையர்கள் வழங்கியுள்ளனர். அனைத்து ஜனாதிபதி வேட்பாளர்களும் இலங்கையின் குடிமக்களுக்கு தங்கள் சொத்துக்களை பகிரங்கமாக அறிவிக்கவும் வெளிப்படைத்தன்மைக்கான தனிப்பட்ட அர்ப்பணிப்பை வெளிப்படுத்துவதும் அவசியம்.

இலங்கை நாடாளுமன்றத்தில் நீண்டகாலம் அங்கம் வகிக்கும் தற்போதைய வேட்பாளர்கள் மக்கள் தங்கள் மீதுள்ள நம்பிக்கையை வலுப்படுத்த புதிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். ஜனாதிபதி வேட்பாளர்களின் சொத்துக்களின் பொது அறிவிப்பு வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல் ஆகியவற்றில் மக்களுக்கு அவர்களின் உறுதிப்பாட்டை நிரூபிக்க ஒரு முக்கியமான படியாக இருக்கும் என்று வலியுறுத்தியுள்ளது. (எ-இ)

# ரணிலுக்கு ஆதரவு சேர்க்கும் மஹிந்த

கொழும்பு, ஜூலை 20

பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் பிற்பகல் சிறிலங்கா பொதுஜன முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

ஜனாதிபதி பதவிக்கு ரணில் விக்கிரமசிங்க போட்டியிடும் நிலையில், இந்தச் சந்திப்பு நடைபெற்றுள்ளது. சந்திப்பில் கருத்துத் தெரிவித்த ரணில் விக்கிரமசிங்க அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பையும் உறுதி செய்வேன் என்று தெரிவித்துள்ளார். இந்தக் கலந்துரையாடலில் முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்சவும் கலந்துகொண்டுள்ளார். (எ-இ)

# அரசியல் ஊழல்களைத் தவிர்த்து மனச்சாட்சியுடன் செயற்படுங்கள்

## எம்.பிக்களிடம் கர்தினால் கோரிக்கை

கொழும்பு, ஜூலை 20

இன்று நடைபெறவுள்ள ஜனாதிபதித் தெரிவில் தாய்நாட்டினதும் மக்களினதும் அபிலாஷைகளை நிறைவேற்றுவதற்கு அதிகார பேராசை மற்றும் அரசியல் ஊழல்களைத் தவிர்த்து, மனச்சாட்சிக்கு ஏற்ப அதிகபட்ச பங்களிப்புடன் சகல நாடாளுமன்ற உறுப்பினர்களும் செயற்படவேண்டும் என்று பேராயர் மல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை கோரிக்கை விடுத்துள்ளார்.

புதிய ஜனாதிபதி தெரிவுக்கான வாக்கெடுப்பு இன்று இடம்பெறவுள்ள நிலையில், நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் நேற்று அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே அவர் இவ்வாறு கோரிக்கை விடுத்தார்.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:-

அனைத்து நிறைவேற்று அதிகாரங்களையும் கொண்ட ஒரு ஜனாதிபதி, ஆட்சியில் இருக்கும்போதே தனது அதிகாரத்தைத் துறந்து செல்ல நேரிட்டமை, இதுவரை வரலாற்றில் நாம் கேள்விப்பட்டிராத ஒரு அரிதான விடயமாகும். இந்தச் சந்தர்ப்பத்தில் தாய்நாட்டின் எதிர்காலம் குறித்து மிகத் தீர்க்கமான முடிவு எடுக்கப்படவிருக்கும் தீர்மானங்கள், இந்த நாட்டு மக்களின் எதிர்பார்ப்புகளுக்கேற்ப முன்னெடுக்கப்படும் என்று முழு நாட்டு மக்களும், சர்வதேச சமூகமும் இலங்கை நாடாளுமன்றத்தை உற்று நோக்கியிருக்கின்றன.

எல்லையற்ற அதிகாரத்தைத் தன்னகத்தே கொண்டிருந்த முன்னாள் ஜனாதிபதியையும் இரண்டில் மூன்று பெரும்பான்மையுடன் ஆட்சிக்கு வந்த அரசாங்கத்தையும், அதிகாரத்திலிருந்து மக்கள் தூக்கி எறிந்ததன் காரணம், இன்று எமது நாடு எதிர்நோக்கும் கடுமையான பொருளாதார நெருக்கடிக்கும் அதன் விளைவாக மக்கள் முகங்கொடுக்கும் கடுமையான துன்பங்களுக்கும் முழுப் பொறுப்புக் கூறவேண்டிய முன்னாள் ஜனாதிபதியும், அரசாங்கமும் என்பதை உணர்ந்து கொண்டதாலேயாகும்.

காலிமுகத்திடலை முன்னிலைப்படுத்தி இலட்சக்கணக்கான மக்கள் வீதியில் இறங்கி வந்து போராடியது மேற்கூறிய ஊழல் நிறைந்த அரசியல் கலாசாரத்திலும் அதன் அமைப்பு முறைமையிலும் ஒரு முழுமையான மாற்றத்தை எதிர்பார்ப்பதே ஆகும். அதற்காக மக்கள் இந்தத் தருணத்தில் தங்களால் இயன்றதை மிகவும் அர்ப்பணிப்புடன் செய்துள்ளனர். ஜனநாயகத்தை மதிக்கும் மக்களாக அவர்கள் தற்போது நாட்டின் அரசமைப்பின்படி இந்த மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு அதன் பொறுப்பை நாடாளுமன்றத்தில் மக்களின் பிரதிநிதிகளாக இருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஒப்படைத்துள்ளனர்.

இந்த இக்கட்டான தருணத்தில் தங்கள் அரசியல் கட்சியின் அதிகார செயற்றிட்டங்களையும் அவற்றில் வெற்றி பெறுவதற்காக அமைச்சர்களை விலைக்கு வாங்குவது போன்ற ஊழல் நிறைந்த செயல்களைப் புறந்தள்ளி மக்களின் அபிலாஷைகளை நனவாக்க வேண்டும். அதற்கு அதிகார பேராசை மற்றும் ஊழலற்ற அர்ப்பணிப்புடன் கூடிய தலைமைத்துவத்தைத் தெரிவு செய்ய தங்கள் மனச்சாட்சிக்கு ஏற்ப அதிகபட்ச பங்களிப்பை வழங்க உங்களுக்குக் கிடைத்துள்ள இந்த அதிர்ஷ்டமான வாய்ப்பைக் கைவிட வேண்டாம் என்று நான் மிகவும் தாழ்மையுடனும் ஆவலோடும் கேட்டுக்கொள்கின்றேன் - என்றுள்ளது.

(எ-14.இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ARISSONA (PVT) LTD
ADVERTISING & PUBLICATION
93, Palaly Road, Thirunelvely, Jaffna.
021 222 3222, 076 141 9307
www.arisona.com | info.arisona.com

WHY WE SELECT THE SILVER HALIDE
WHY NOT WE SELECT THE INKJET

SRI LANKA FOR THE FIRST TIME

Baby Photo
PRINTING SOLUTIONS
91, Palaly Road, Thirunelvely, Jaffna.
021 222 6912, 0761419308

PROFESSIONA  SILVER HALIDE PHOTO PRINT OF THE HIGHEST QUALITY
எமது நிறுவனத்தின் SILVER HALIDE PRINT இன் தேர்விற்கு...

- FROM 30 INCHES ON, ANY LENGTH CAN BE PRINTED. UPTO UNLIMITED...
  30 அங்குலத்திலிருந்து, எந்த நீளத்திலும் பிறிண்ட் செய்யலாம். விரும்பிய நீளத்திற்கு...
- IT IS EXCELLENT FOR PRINTING NATURAL SKIN TONES & FULL TONE
  இயற்கையான தோல் நிறங்களில் பிறிண்ட் செய்வதற்கு மிகச் சிறந்தது
- DEEP BLACKS AND BRILLIANT WHITES CAN GET PRINTED
  துல்லியமான கறுப்பு நிறம் மற்றும் நுட்பமான வெள்ளை நிறத்தில் பிறிண்ட் செய்யலாம்
- ALBUMS IN THE KARIZMA STYLE CAN BE PRINTED IN EXCELLENT QUALITY
  ஹரிஸ்மா அல்பங்களை உயர் தரத்தில் பிறிண்ட் செய்ய முடியும்
- FOR A VERY LONG PERIOD, THIS PRINT WILL NOT FADE
  மிக நீண்ட காலத்திற்கு, இந்த பிறிண்ட்டின் நிறம் மாற்றமடையாது
- THIS TYPE OF PRINT IS HIGHLY PREFERRED BY PROFESSIONAL PHOTOGRAPHERS
  இந்த வகை பிறிண்டையே பிரபல்யமான புகைப்படக்கலைஞர்கள் அதிகமாக விரும்புகிறார்கள்




YOU CAN GET ALL THE TYPES OF PRINTS YOU NEED IN ONE PLACE.
www.arisona.com
91, Palaly Road, Thirunelvely, Jaffna.


# மரண அறிவித்தல்

## திருமதி இராசலிங்கம் இரத்தினம்



கம்பர்மலையைப் பிறப்பிடமாகவும், உரும்பிராய் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசலிங்கம் இரத்தினம் நேற்று (19.07.2022) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை அம்மினிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான இராமுப்பிள்ளை இலட்சுமி தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்றவர்களான துரைச்சாமி, ராசா, காந்தி, தங்கரத்தினம், சின்னமணி, செல்லக்கண்டு ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற இராசலிங்கத்தின் அன்பு மனைவியும், நகுலேஸ்வரன் (பிரான்ஸ்), நகுலேஸ்வரி, சுதா, லதா (இந்தியா), உமா (ஜேர்மனி), ரதி, ரகு (கனடா), ரஜனி (கனடா), காலஞ்சென்ற நாகேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும், ரோகினி (இந்தியா), சிவராசா, காலஞ்சென்ற தியாகராசா மற்றும் தர்மசீலன் (லண்டன்), தருமலிங்கம் (ஜேர்மனி), அகிலன், புனிதா (கனடா), பிரபாகரன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், சதிஸ், தர்சன் (கனடா), கபில்ராஜ் (ஆஸ்திரேலியா), புருசோத்தமன் (சுவிஸ்), காயத்திரி (லண்டன்), தர்சா (இந்தியா), சிந்தூரி (கனடா), சுயிந்தன் (இந்தியா), தாட்சாயினி (ஜேர்மனி), கம்ஷா, லோஜிதன் (பிரான்ஸ்), ரம்யா, கிஷாந், தயனி (கனடா), சோனா (கனடா), சுயந்த் (கனடா), அஜந்த் (கனடா) ஆகியோரின அன்புப் பேர்த்தியும், அனுஷ்கா, துளக்ஷிகா, சாய்சரன் (கனடா), கனுஷ்கா (கனடா), ஆரா (லண்டன்), ஆத்விக் (இந்தியா) ஆகியோரின் அன்பு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.07.2022) புதன்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக இருளன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

077 9582570 (சுதா)
077 880 3879 (கண்ணன்)

தகவல்:
குடும்பத்தினர்

(CS 20032)1-6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



மலர்வு 07.06.1956

உதிர்வு 18.07.2022

## தங்கராசா கணேஸ்வரி

இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தங்கராசா கணேஸ்வரி நேற்று (18.07.2022) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.
அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் தங்கராசா (இளைப்பாறிய மானிப்பாய் ப.நோ.கூ.சங்கம்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற செல்லையா-தங்கரத்தினம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற நாகலிங்கம்-சின்னத்தங்கச்சி தம்பதியரின் அன்பு மருமகளும் கஜனி (பிரதேச செயலகம் சண்டிலிப்பாய்), அமரர் கஜன் மற்றும் ருஷானி (ஆவரங்கால் நடராசா இராமலிங்கம் பாடசாலை) ஆகியோரின் அன்புத் தாயாரும் கதிர்காம ஈஸ்வரன், காலஞ்சென்ற சிவாஸ்வரன் மற்றும் ஞானேஸ்வரன் (சுவிஸ்), சர்வேஸ்வரன் (NDB Bank) ஆகியோரின் சகோதரியும் லவன் (RDD Point Pedro), சஜீஸ் (Srilanka Insurance) ஆகியோரின் மாமியாரும் அபினன், அபினயா, ஆருஷ் ஆகியோரின் பேர்த்தியுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.07.2022) புதன்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்

தகவல்: குடும்பத்தினர்.

077 177 6763

# 30 கிலோ கஞ்சா நெடுந்தீவில் மீட்பு



யாழ்ப்பாணம், ஜூலை 20

நெடுந்தீவு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 30 கிலோகிராம் கஞ்சா நேற்றையதினம் கடற்படையால் மீட்கப்பட்டது. படகொன்றில் வைக்கப்பட்டிருந்த நிலையிலேயே மேற்படி கஞ்சாப் பொதிகள் மீட்கப் பட்டுள்ளன.

கடற்படையினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து, மேற்கொண்ட சுற்றிவளைப்பிலேயே இந் தக் கஞ்சாப் பொதிகள் மீட்கப்பட்டன. கஞ்சாப் பொதி கள் பொலிஸாரிடம் பாரப்படுத்தப்பட்டதை அடுத்து, இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலி ஸார் முன்னெடுத்துள்ளனர். (அ-ம-125)

# வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் மொத்த வியாபார நிலையம் மற்றும் கொழும்பு வெளிநாட்டு பொதிகள் சேவை நிலையம் என்பவற்றுக்கு பின்வரும் வெற்றிடங்களுக்கு பணியாளர் கள் தேவைப்படுகின்றனர். ஆர்வமுள்ள ஆண், பெண் இருபாலாரும் தொடர்பு கொள்ளவும்.

- சிட்டை எழுதுநர்
- காசாளர்


தொடர்புகளுக்கு:- 076 00 94946

# கிளிநொச்சியில் வெடிபொருள்கள் மீட்பு

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கனகாம்பிகைக் குளம் பகுதியில் உள்ள தனியார் காணியொன்றில் இருந்து நேற்றைய தினம் ஏராளமான வெடிபொருள்கள் மீட்கப்பட்டுள்ளன. காணி உரிமையாளர் மேற்படி காணியில் துப்புரவுப் பணியில் ஈடுபட்ட போதே இந்த வெடிபொருள்கள் அடையாளம் காணப்பட்டன. இவை தொடர்பில் தகவல் வழங்கப்பட்டதையடுத்து சிறப்பு அதிரடிப்படையால் வெடிபொருள்கள் மீட்கப்பட்டன. மோட்டார் ஷெல்கள், மகசின்கள் உள்ளிட்ட வெடிபொருள்களே அவ்வாறு மீட்கப்பட்டன. (அ-ம-113)



# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



கடந்த (31.07.2021) அன்று இறைவனடி சேர்ந்த எங்கள் குடும்பத் தலைவி

அமரர் திருமதி

## குகராசா புவனேஸ்வரி

அன்னை மடியில் 13.08.1938

ஆண்டவன் அடியில் 31.07.2021

அவர்களின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி இன்று (20.07.2022) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

ஆண்டுகள் எத்தனை சென்றாலும்
ஆறாது உங்கள் நினைப்பு
என்றும் உங்கள் நினைவுகளுடன் உங்கள்

குடும்பத்தினர்
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

அராலி மத்தி,
வட்டுக்கோட்டை.

(cs.20024) (2.6)

# மூதாளர் அன்பு இல்லத்தில் முதியோரை இணைத்துக் கொள்வதற்கான விண்ணப்பம் கோரல்

சைவத் தமிழ்ச்சங்கம் - அருள்மிகு சிவன் கோவில்
அன்பே சிவம் அறக்கட்டளை
சிவபுரவளாகம் - மூதாளர் அன்பு இல்லம்
மூதாளர் அன்பு இல்லத்தில் இணைந்து
வாழ விருப்புடையோர்
"பெற்றோரைப் பேணுதல் பிள்ளைகளின் கடமை"

எமது பெற்றோரைக் காப்பதும் பராமரிப்பதும் தெய்வத்திற்காற்றும் தொண்டிலும் மேலாகக் கருதும் நாம் தற்போதைய அவசர உலகில், அவர்களை சரிவரக் கவனிப்பதில் பல சிரமங்களை எதிர் கொள்கின்றோம். அதிலும் தனித்து வாழும் மூதாளர்கள் படும் இன்னல்கள் சொல்லிலடங்கா. நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையும் இயற்கை அழிவும், இடப்பெயர்வும் எமது பண்பாட்டு வாழ்வை மேலும் அழிவுக்குள்ளாக்கியது. இந்நிலையில் எமது பாரம்பரிய பண்பாட்டை மீறிய செயற்பாடாக இருந்தாலும் தற்போதைய முதியவர்களின் தேவை கருதி அன்பே சிவம் அறக்கட்டளை சிவபுரவளாகத்தில் நவீன வசதிகளுடன் மூதாளர் அன்பு இல்லத்தினை ஆரம்பிக்கின்றோம். இவ் இல்லம் இலவசமாக தனது சேவையினை ஆற்றவுள்ளது.

எனவே முதற்கட்டமாக மட்டுப்படுத்தப்பட்ட சேவையினை வழங்குவதனால் தனித்து வாழும் தமது நாளாந்த கடமையினை சுயமாக ஆற்றக்கூடிய மூதாளர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். தொடர்ந்து இல்லம் விரிவாக்கம் பெற்று நாளாந்தம் தாதியார், பராமரிப்பாளர் உதவி தேவைப்படுவோரிற்கான சேவையினையும் விரைவில் நாம் ஆரம்பிக்கவுள்ளோம்.

அவ் வகையில் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளுக்கு உட்பட்டு சில முதியவர்களை இணைக்கவுள்ளோம்.

- இல்லத்தில் வாழ்வதற்கு 60 வயதிற்கு மேற்பட்ட இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
- நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையால் பாதிக்கப்பட்ட தனித்து வாழும் மூதாளர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- விண்ணப்பங்களை A-9 வீதி, முகமாலை சிவபுர வளாகத்தில் பெற்று 30.07.2022 இற்கு முன்னதாக அனுப்பி வைக்கவும்.
- விண்ணப்பம் அனுப்ப வேண்டியமுகவரி

நிறைவேற்றுப் பணிப்பாளர்
சிவபுர வளாகம்
A-9 வீதி, முகமாலை, பளை.

தொடர்புகளுக்கு :
நிறைவேற்றுப் பணிப்பாளர்
திரு.குமரேசன் குமணன்
0776224038 / 0776171397

# மரண அறிவித்தல்

அன்னை மடியில் 04 . 11 . 1942



ஆண்டவன் அடியில் 19 . 07 . 2022

## திருமதி பொன்னுத்துரை செல்லம்மா

யாழ்.தையிட்டி காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும், தாவடி தெற்கு கொக்குவிலை தற்காலிக வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி பொன்னுத்துரை செல்லம்மா அவர்கள் நேற்று (19.07.2022) செவ்வாய்க்கிழமை இறைவனடி எய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி வியாளர் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற பொன்னுத்துரை அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சின்னையா-செல்லாச்சி தம்பதியரின் அன்பு மருமகளும் தயாபரன் (சென்.ஜோன்ஸ் கல்லூரி), விஜிதா (லண்டன்), துவாரகன் (லண்டன்), கவிதா ஆகியோரின் அன்புத் தாயாரும் ஜெயரூபி (யாழ்.சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), கருணாகரன் (லண்டன்), கௌசிகா (லண்டன்), சுதாகரன் ஆகியோரின் அன்பு மாமியும் கம்சிகன், அபிராம், விஷ்ணுகரன், வைஷ்ணவி, கவிநயா, கார்த்திகன், கிருத்திகன், லக்ஷாயினி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை, மகேஸ்வரி, சின்னம்மா, பாலசிங்கம், சற்குணநாதன் ஆகியோரின் அன்புச் சகோரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.07.2022) புதன்கிழமை நண்பகல் 12.30 மணியளவில் தாவடி தெற்கு கொக்குவிலிலுள்ள அவரது மகனின் இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 2.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு :
தயாபரன் (மகன்) - 077 2065 590

தகவல்: குடும்பத்தினர்.

# இதய அஞ்சலி

தோற்றம் 06 . 02 . 1930



மறைவு 18 . 07 . 2022

## அமரர் இராமலிங்கம் காசிநாதன்

எமது ஆலயத்தின் போஷகராக,
அன்பாய் ஆதரவாய் எப்போதும்
எல்லாவற்றிலும் நிறைந்து நின்று
எம்மை வழிநடத்தி வந்தீர்கள்.
பல காலம் உங்கள் வழி நடத்தலில் வாழ்ந்திட்டோம்
மீதிக்காலம் உங்கள் நினைவுகளோடு...

அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது நெஞ்சம் நெகிழ்ந்த இதய அஞ்சலிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.
அன்னாரின் ஆத்மா நரசிங்க வைரவர் பாதங்களில் சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

அளவெட்டி நரசிங்க வைரவர் ஆலய பரிபாலன சபையினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடி வைத்தியத்தை நம்பியதால் புற்றுநோய் சிறுவன் பரிதாபச்சாவு!

### யாழ்ப்பாணத்தில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஜுலை 20

குருதிப் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட சிறுவன் நாடி வைத்தியம் என்ற போர்வையில் முன்னெடுக்கப்பட்ட பராமரிப்பினால் பரிதாபமாக உயிரிழந்தான்.

வவுனியாவைச் சேர்ந்த 15 வயது மாணவன் வட்டுக்கோட்டையில் உள்ள வீடொன்றில் நேற்று உயிரிழந்தான். விசாரணைகளை முன்னெடுத்த வட்டுக்கோட்டை பொலிஸார் சடலத்தை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் ஒப்படைத்தனர். சடலத்தில் முன்னெடுக்கப்பட்ட உடற்கூற்றுப் பரிசோதனையில் சிறுவனுக்கு குருதிப் புற்றுநோய் இருந்ததாகக் கண்டறியப்பட்டது.

இந்த நிலையில் திடீர் இறப்பு விசாரணையில், வவுனியாவைச் சேர்ந்த சிறுவனின் குடும்பத்தினர் உரும்பிராயில் உள்ள நபரொருவரின் நாடி வைத்தியத்தை நம்பி வட்டுக்கோட்டையில் தங்கியிருந்து மகனுக்கு சிகிச்சை பெற்றுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

குருதிப் புற்றுநோய்க்கு சிறப்பு மருத்துவம் உள்ள நிலையில், நாடி வைத்தியம் சிறந்தது என்று சிறுவனின் பெற்றோரால் நம்பப்பட்ட நிலையில் இந்த பரிதாப நிலை ஏற்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி மற்றும் சட்ட மருத்துவ அதிகாரியின் அறிக்கை மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் முன்வைக்கப்படவுள்ளது. (ம-26)

## டலஸ் - ரணில்...

இவர்களில் அநுர குமார திஸாநாயக்கவுக்கு ஜே.வி.பி.யினரைத் தவிர பிறிதெவரும் ஆதரவு தெரிவிக்கவில்லை. இதனால் அவரை அடுத்த ஜனாதிபதியாகத் தெரிவு செய்வதற்கு வாய்ப்புக்கள் மிகக் குறைவு. ரணிலுக்கும், டலஸுக்கும் இடையேதான் நேரடிப்போட்டி இருக்குமெனக் கணிக்கப்பட்டுள்ளது.

நிறைவேற்று அதிகாரம்கொண்ட 8 ஆவது ஜனாதிபதித் தெரிவுக்கான வேட்பு மனுக்கள் நேற்றையதினம் நாடாளுமன்றத்தில் கோரப்பட்டன. இதன்போது டலஸ் அழகப்பெரும, ரணில் விக்கிரமசிங்க, அநுரகுமார திஸாநாயக்க ஆகியோரின் பெயர்கள் முன்மொழியப்பட்டு வழிமொழியப்பட்டன.

நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெருமவின் பெயரை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ முன்மொழிந்ததுடன், நாடாளுமன்ற உறுப்பினர் ஜீ.எல்.பீரிஸ் வழிமொழிந்தார்.

ரணில் விக்கிரமசிங்கவின் பெயரை நாடாளுமன்ற சபை முதல்வரும் அமைச்சருமான தினேஷ் குணவர்தன முன்மொழிந்ததுடன், நாடாளுமன்ற உறுப்பினர் மனுஷ நாணயக்கார வழிமொழிந்தார். நாடாளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்கவின் பெயரை நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் முன்மொழிய, நாடாளுமன்ற உறுப்பினர் ஹரிணி அமரசூரிய வழிமொழிந்தார்.

இந்த வேட்பாளர்கள் மூவரினதும் வேட்புமனுக்கள் 1981ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க ஜனாதிபதித் தேர்தல்கள் சட்டத்துக்கு அமைய அடுத்துவரும் ஜனாதிபதிப் பதவிக்கான தெரிவுக்காக ஏற்றுக் கொள்ளப்பட்டதாக நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தஸநாயக்க அறிவித்தார். (அ-ம)

## சுதந்திரக் கட்சியும்...

தெரிவித்தார்.

ஜனாதிபதித் தெரிவின்போது சுதந்திரக் கட்சி தனது வாக்குகளைப் பயன்படுத்தாது என்றும், நடுநிலை வகிக்கும் என்றும் அந்தக் கட்சியின் உயர்மட்டங்கள் அண்மையில் தெரிவித்திருந்தன. மைத்திரிபால சிறிசேனவும் இதே கருத்தையே தெரிவித்திருந்தார். எனினும், அந்தக் கட்சியினர் நேற்று மாலை தமது முடிவை மறுபரிசீலனை செய்வது தொடர்பாக மேற்கொண்ட கலந்துரையாடலை அடுத்து, டலஸை ஆதரிப்பது என்று சுதந்திரக் கட்சி தீர்மானித்துள்ளது என்று மைத்திரிபால சிறிசேன அறிவித்தார்.

'ஜனாதிபதியைத் தெரிவு செய்வதில் சுதந்திரக் கட்சி நிச்சயமாக வாக்குகளைப் பயன்படுத்தும். ஆனால் நாடாளுமன்றத்தில் வாக்குகளை அடிப்படையாகக் கொண்டு தீர்மானங்களை எடுப்பதற்குப் பதிலாக, ஒருமித்த கருத்தை எட்டுவதற்கான அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன' - என்று சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர முன்னதாகத் தெரிவித்திருந்தாரென்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம)

## ஜனாதிபதித் தெரிவில்...

மற்றும் இராஜதந்திரிகளிடம் நேற்றுத் தெரிவித்தார் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன.

சர்வதேசப் பிரதிநிதிகளுக்கும் சபாநாயகருக்கும் இடையிலான சந்திப்பு நேற்று இடம்பெற்றது. இதன்போது ஜனாதிபதித் தெரிவு தொடர்பில் தெளிவுபடுத்திய அவர் தொடர்ந்து உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஆசியாவின் மிகப்பழமையான ஜனநாயக நாடு என்ற வகையில், புதிய ஜனாதிபதியைத் தெரிவுசெய்வதற்கான நடவடிக்கைகள் வெளிப்படைத்தன்மையுடன் முன்னெடுக்கப்படும். அதற்குரிய அனைத்து ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்படும். ஜனநாயகமும் நாடாளுமன்ற சுதந்திரமும் இந்த ஜனாதிபதித் தெரிவின் மூலம் நிலைநிறுத்தப்படும் - என்றார். (அ-ம)

## ஹக்கீம்,...

டலஸுக்கு ஆதரவு வழங்குவது என்று ஹக்கீம் மற்றும் ரிஷாத் தரப்பினர் நேற்று அறிவித்தனர்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட 8ஆவது ஜனாதிபதிக்கான தேர்தல் நேற்று இடம்பெற்றது. இந்தத் தேர்தலில் எவரை ஆதரிப்பது என்று நேற்று மாலை ஒவ்வொரு கட்சிகளும் அறிவிப்புக்களை விடுத்தன. இந்த நிலையில், ரிஷாத் மற்றும் ஹக்கீம் தரப்பு டலஸுக்கு ஆதரவை அறிவித்தன.

ரிஷாத், ஹக்கீம் இருவருக்கும் அமைச்சுப் பதவிகளை வழங்க டலஸ் இணக்கம் தெரிவித்துள்ளார் என்றும் அவர்கள் இருவரும் முன்னதாகப் பதவி வகித்த - பரிச்சயமான அமைச்சுக்கள் வழங்கப்படலாம் என்றும் கொழும்பு வட்டாரங்களில் இருந்து அறிய முடிகின்றது. (அ-ம)

## பாடசாலைகளின்...

திங்கட்கிழமையே பாடசாலைகள் ஆரம்பமாகும் என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

எரிபொருள் தட்டுப்பாடு காரணமாகவும் நாட்டின் இதர நெருக்கடி காரணமாகவும் பாடசாலைகளுக்கு நாளையதினம் வரை விடுமுறை வழங்கப்பட்டிருந்தது. தற்போது இந்த விடுமுறை நீடிக்கப்பட்டுள்ளது. இதன்படி எதிர்வரும் திங்கட்கிழமையே பாடசாலைகள் ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம)

## ஜனாதிபதித் தெரிவு...

இது தொடர்பில் சர்வதேச சமூகம் இலங்கையை இன்று உன்னிப்பாகக் கண்காணிக்கின்றது.

கோத்தாபய அரசாங்கத்துக்கு எதிராக நாடளாவிய ரீதியில் வெடித்த கலவரங்கள், கோத்தாபயவின் பதவி விலகல் என இலங்கையில் கடந்த மூன்று மாதங்களாக இருக்கும் உச்சப்பதற்ற நிலைமை தொடர்பில் சர்வதேச சமூகம் தனது கருத்தையும் கரிசனையையும் வெளிப்படுத்தியிருந்தது. சர்வதேச ஊடகங்களும் இது தொடர்பில் முக்கியத்துவம் கொடுத்துச் செய்தி வெளியிட்டிருந்தன. இந்த நிலையிலேயே, நிறைவேற்று அதிகாரம்கொண்ட 8ஆவது ஜனாதிபதித் தெரிவு தொடர்பில் சர்வதேசம் இலங்கையை உன்னிப்பாகக் கண்காணித்துள்ளது.

இலங்கையில் உள்ள பிறநாட்டுத் தூதரகங்கள் இது தொடர்பான சிறப்பு அறிக்கையிடல்களை மேற்கொண்டு வருகின்றன என்று தெரியவருகின்றது. அதே போன்று இன்றையதினம் சிறப்புச் செய்தியறிக்கையிடல்களுக்காக சர்வதேச ஊடகங்களும் தயாராகவுள்ளன. (அ-ம)

## தமிழ் மக்கள்...

வெடுத்துள்ளது என்று அதன் தலைவர் மனோ கணேசன் அறிவித்தார்.

ஐக்கியமக்கள் கூட்டணியுடன் இணைந்து செயற்படுவதற்கு டலஸ் இணங்கியமையாலும், நேர்மையான சர்வகட்சி அரசாங்கத்தை அமைப்பதற்கு டலஸ் சம்மதம் தெரிவித்துள்ளதாலும் இந்த முடிவை தமிழ் மக்கள் கூட்டணி எடுத்துள்ளது என்று மனோ கணேசன் மேலும் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் கூட்டணியின் தலைவரான சஜித், டலஸை ஆதரிக்கும் முடிவை நேற்று நண்பகலே அறிவித்த போதிலும் ஐக்கிய மக்கள் கூட்டணியின் ஓர் அங்கமாக இருக்கும் தமிழ் மக்கள் கூட்டணி சஜித்தின் முடிவை தனது அதிகாரங்களுக்கு உட்படுத்தி மறுபரிசீலனைக்கு உட்படுத்தியது. இந்த நிலையிலேயே சஜித் எடுத்த அதே முடிவை மனோ உறுதிப்படுத்தினார்.

மனோ கணேசன் டலஸை ஆதரிப்பது என்று முடிவெடுத்துள்ளதால், அவர் அமைச்சரவையில் இடம்பெற வாய்ப்புக்கள் அதிகம் என்று கருதப்படுகின்றது. மைத்திரி - ரணில் ஆட்சிக்காலத்தில் மனோவிடம் இருந்த அமைச்சு மீண்டும் அவருக்கு வழங்கப்படலாம். (அ-ம)

## சுயேச்சை...

அறிவித்துள்ளனர்.

சுயேச்சை நாடாளுமன்ற உறுப்பினர்கள் கொழும்பில் தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்தும் வகையில் செய்தியாளர் சந்திப்பை நடத்தினார்கள். இதன்போதே நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ இவ்வாறு தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெருமவுக்கு சுயேச்சை நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவின் ஆதரவு வழங்கப்படும் என விமல் வீரவன்ஸ மேலும் தெரிவித்தார். (அ-ம)

## கூட்டமைப்பும்...

இருப்பினும், நேற்றிரவுவரை அவ்வாறான ஆவணம் எதுவும் வழங்கப்பட்டிருக்கவில்லை என்று தெரியவருகின்றது.

ஜனாதிபதித் தெரிவு நாடாளுமன்றத்தில் இன்று இடம்பெறுகின்றது. இந்தத் தெரிவில் எவரை ஆதரிப்பது என்பது தொடர்பான பேச்சுக்கள், பிடுங்குப்பாடுகள் நேற்று நள்ளிரவு தாண்டியும் தொடர்ந்தன. கூட்டமைப்பு ரணிலை ஆதரிப்பதில்லை என்ற முடிவை பூர்வாங்க அடிப்படையில் எடுத்திருந்த போதிலும், டலஸை ஆதரிப்பதா என்பதில் கட்சிக்குள் இரு வேறுபட்ட அபிப்பிராயங்கள் நிலவின.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரான சம்பந்தன், கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் ஆகியோர் டலஸை ஆதரிப்பது என்று முடிவெடுத்தனர். ஆனால், ஏனையோர் அந்த முடிவுக்கு எதிர்ப்பை வெளியிட்டனர். 'எவரையும் நம்ப முடியாது. ஆதலால் எவரையும் ஆதரிக்கவேண்டாம்' என்பது அவர்களின் நிலைப்பாடாக இருந்தது.

இதையடுத்து டலஸுக்கு ஆதரவு தெரிவிக்க தயக்கம் வெளியிட்டவர்களை டலஸுடன் பேச்சு நடத்த சுமந்திரன் ஏற்பாடுகளை மேற்கொண்டார். இதையடுத்து சம்பந்தனின் இல்லத்துக்கு டலஸ், சஜித் இருவரும் நேற்றிரவு நேரில் சென்றனர். அங்கு, கூட்டமைப்பினருக்கும் சஜித் மற்றும் டலஸுக்கும் இடையில் நீண்ட நேரம் பேச்சு இடம்பெற்றது.

'எழுத்து மூலமான வாக்குறுதி வழங்கினால் கூட்டமைப்பு டலஸை ஆதரிக்கும்' என்ற முடிவு எட்டப்பட்டது. இதற்கு சஜித், டலஸ் இருவரும் சம்மதம் தெரிவித்தனர். எனினும், நேற்று நள்ளிரவு வரையில் எந்தவிதமான எழுத்துமூல ஆவணமும் கூட்டமைப்புக்கு டலஸால் வழங்கப்படவில்லை. அந்த ஆவணம் கிடைக்காத பட்சத்தில் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரும் தனது முடிவை மறுபரிசீலனை செய்யவும் வாய்ப்புக்கள் உள்ளன. அத்துடன், கூட்டமைப்பு டலஸை ஆதரிப்பதாக முடிவெடுத்த போதும், இரகசிய வாக்கெடுப்பு என்பதால் சிலர் ரணிலுக்கு வாக்களிக்கும் சாத்தியக்கூறுகள் இருக்கவே செய்கின்றன என்றும் உள்வீட்டுத் தகவல்கள் தெரிவித்தன. (அ-ம-22-26)

## டலஸ்...

நேற்றிரவு தகவல்கள் வெளிவந்தன.

ஜனாதிபதித் தெரிவின்போது எவரையும் ஆதரிப்பதில்லை என்ற தீர்மானத்தை சுதந்திரக் கட்சி ஏற்கனவே எடுத்திருந்தது. இந்த நிலையில் நேற்று இரவு அந்தக்கட்சிதனது முடிவைமறுபரிசீலனைக்கு உட்படுத்தி டலஸை ஆதரிப்பது என்று தீர்மானித்தது. டலஸ் ஜனாதிபதியானால், மைத்திரிபால சிறிசேனவை சபாநாயகராக நியமிக்க வழங்கிய உத்தரவாதத்தை அடுத்தே சுதந்திரக் கட்சி டலஸை ஆதரிப்பது என்று தீர்மானித்துள்ளது.

அதேநேரம், ரணில் ஜனாதிபதியானால், கருஜயசூரியவை நாடாளுமன்றத்துக்கு உள்வாங்கி அவரை சபாநாயகராக்க வாய்ப்புக்கள் உள்ளன என்று முன்னதாகத் தகவல்கள் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-ம)

## மற்றொரு...

நேற்றிரவு பேச்சை நடத்தியது.


நேற்றிரவு டலஸ் தரப்புக்கு பல சிறு கட்சிகளும் ஆதரவு வழங்கிய நிலையில், தனது பெரும்பான்மையை உறுதிப்படுத்துவதற்காக டலஸ் தரப்பு, பெரமுனவில் சுமார் 8 பேர் கொண்ட ஒரு குழுவுடன் பேச்சு நடத்தியது என்று தகவல்கள் வெளிவந்தன. இதனால் நேற்று நள்ளிரவு தாண்டியும் கொழும்பு அரசியல் பரபரப்புக்கு உரியதாகவே இருந்தது. (அ-ம)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்களது நலனை முன்னிறுத்தி செயற்படவேண்டும் தமிழ் எம்.பிக்கள்

திருகோணமலை, ஜூலை 20

**புதிய ஜனாதிபதித் தெரிவில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் வாக்குகள் செல்வாக்குச் செலுத்தும் என்று கருதப்படும் நிலையில், தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைந்து தமிழ் மக்களின் நலனை முன்னிறுத்திச் செயற்பட வேண்டுமென்று தெரிவித்துள்ளார் தென் கயிலை ஆதீனம் தவத்திரு. அகத்தியர் அடிகளார்.**



இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தற்போது தெரிவு செய்யப்படவுள்ள புதிய ஜனாதிபதியைத் தீர்மானிப்பதில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் வாக்குகள் செல்வாக்குச் செலுத்தும் எனக் கருதப்படும் நிலையில், எம்மிடையேயுள்ள பேதங்களை மறந்து ஒட்டுமொத்த இனத்தின் நலனை முன்னிறுத்தி தமிழ்த் தேசிய அடிப்படைக் கோட்பாடுகளின் நீண்டகால மனிதநேயக் கோரிக்கைகளை முன்வைத்து வேட்பாளர்களுக்கு ஆதரவு வழங்க வேண்டுமென்பதே தமிழ்மக்களின் எதிர்பார்ப்பாகும்.

தமிழ் அரசியல் கைதிகள் அனைவரும் நிபந்தனையின்றி உடனடியாக விடுவிக்கப்படவேண்டும். பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்படவேண்டும்.

நேரடியாக ஒப்படைத்து காணாமற் போனோர் விவகாரத்தில் நீதியான தீர்வும் உரிய உடனடி நீண்ட கால நிவாரணங்களும் வழங்கப்படுவதை உறுதிப்படுத்தவேண்டும், வடக்கு - கிழக்கு பொருளாதார நிதியம் புலம் பெயர் முதலீடுகளுக்கு பாதுகாப்பும் தங்கு தடையற்ற ஊக்குவிப்பும் வழங்கவேண்டும். ஆக்கிரமிக்கப்பட்டுள்ள காணிகள் விடுவிப்பும் தொல்பொருள், வனவிலங்கு, மகாவலி ஆக்கிரமிப்பு வலய பிரகடனங்களை மீளப்பெறுதல்,

தாயகம், சுயநிர்ணயம், அடிப்படையில் நிரந்தரத் தீர்வும் முன்னதாக இடைக்கால நிர்வாக பரிசீலனையும் வழங்கல் போன்ற விடயங்களில் உடனடி இணக்கப்பாடும் நீண்டகாலத் தீர்வுகளுக்கு கொள்கைரீதியான உடன்பாடும் தெரிவிக்கும் பேச்சுக்கள் மேற்கொண்டே ஆதரவுத் தளத்தை தீர்மானிக்க அனைத்துத் தமிழ்க் கட்சிகளும் முன்வர வடக்கு - கிழக்கின் ஆன்மீகத் தலைவர்களில் ஒருவர் என்ற ரீதியில் மக்கள் சார்பாக கேட்டு நிற்கின்றோம் -என்றுள்ளது.

(எ-14-125)

**வேலையாட்கள் தேவை**

எமது நிறுவனத்திற்கு
- போட்டோ டிசைனர் மற்றும்
- வரவேற்பாளர் தேவை

ஆண், பெண் இருபாலாரும் ஏற்றுக்கொள்ளப்படும்
சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்புகளுக்கு:- 070 430 1884

**நேரலை ஒளிபரப்பு**

செந்தமிழன் STUDIO
077 6405572

**காணி விற்பனைக்கு**

யாழ் நாவற்குழியில் 84 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு
- A.09 பிரதான வீதி முகப்புடனும் மற்றும் 20 அடி பாதையுடன் பின் பக்கமாகவும்
- நாவற்குழி சந்தியில் இருந்து 500 m தூரத்தில்
- மூன்று பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- A.09 வீதியில் இருந்து 200 m தூரத்தில் 20 அடி பாதையுடன் அமைந்துள்ள காணி ஒரு பரப்பின் விலை நான்கு லட்சம் (400000/-)
- இயற்கை சூழலுடன் வியாபார நிலையங்கள், களஞ்சியசாலைகள், மண்டபங்கள், வீடுகள் அமைப்பதற்கு உகந்த சூழல்

பார்வை இடும் நேரம்
காலை 8 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை

தொடர்புகளுக்கு
076 490 5403, 076 491 2493,076 490 6029

**31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்**

தோற்றம் 02 . 11 . 1944



மறைவு 20 . 06 . 2022

கடந்த (20.06.2022) திங்கட்கிழமை அன்று சிவபதமடைந்த
எங்கள் குடும்பத் தலைவர்

**அமரர் சதாசிவம் சிவஞானசுந்தரம்**

அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து எமது இல்லத்திற்கு நேரில் வந்து அஞ்சலி செலுத்திய வர்களுக்கும், உலகின் பல பாகங்களில் இருந்து தொலைபேசி, சமூக வலைத்தளங்கள் மூலமாக அனுதாபங்களை பகிர்ந்து கொண்டவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலி சுவரொட்டிகள், பதாகைகள், மலர்வளையங்கள் மூலமாக அனுதாபங்களை பகிர்ந்து கொண்டவர்களுக்கும், இறுதி ஊர்வலத்தில் பங்குபற்றியவர்களுக்கும் இக்கணம் வரை எமது தேவைகளை பூர்த்திசெய்து தோளோடு தோள் நின்ற அன்புள்ளங்களுக்கும் இந்த வேளையில் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (20.07.2022) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

குடும்பத்தினர்
சி.வசிதரன்
நியூ சிற்றிரெக்ஸ் (Pvt) Ltd,
ஐடியாஸ், யுனிமெக்ஸ், சிற்றி மார்ட்

12/1, பொற்பதி வீதி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
021 222 2502
077 723 0104

(cs.2022) (2.6)

**மரண அறிவித்தல்**



**திருமதி சின்னராசா விஜயலட்சுமி**
(ஓய்வு பெற்ற ஆசிரியை-
யா/ மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை)

சங்குவேலியை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி சின்னராசா விஜயலட்சுமி கடந்த (17.07.2022) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - மாணிக்கம் தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வியும், காலஞ்சென்றவர்களான இராசையா - நாகம்மாவின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சின்னராசாவின் அன்பு மனைவியும், ஜெயலட்சுமி, காலஞ்சென்றவர்களான நாகபூசணி அம்பாள், இந்திராணி ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஜெயபரனின் பாசமிகு தாயாரும், மாதினியின் அன்பு மாமியாரும், ஜெயதீசன், ஜெனார்த்தனன், ஜெசிந்தன், மதுரா, ஜெயப்பிரதாப் ஆகியோரின் அன்பு அப்பம்மாவும், சந்திரிகா, நிஷாந்தினி, திஷானி, பகீரதன், சிந்துஜா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், ஜெயப்பிரியன், சஞ்சனா, அபிரா, ஜெயீசன், நிபூர்ணா, அகரா, திஜேனி, அகரன், ஜெய்சரண், சயானா ஆகியோரின் அன்பு பூட்டியும் ஆவர்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் நாளை (21.07.2022) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சங்குவேலி சங்கம்புலவு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்
077 745 9218 / 075 056 0865

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்: advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 20.07.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.